269

மதுரை பிரஹ்மஞான சபை பிரசுரம்-2.

ॐ

# மௌன வாக்கு

Q4
N54
10542

# பிரும்ம ஞான சங்கம்.

1875-ம் வருஷத்தில் பிரும்ம ஞான சங்கம் ஸ்தாபிக்கப் பட்டு, அதன் அகில உலக தலைமைக்காரியாலயம், சென்னை அடையாற்றில் நிறுவப்பட்டிருக்கிறது.

ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டுள்ள கிளைகளுடன் 51 தேசீய ஸ்தாபனங்கள் இச்சங்கத்தின் அங்கங்களாக ஏற்பட்டு உலகம் முழுதும் வியாபித்து இருக்கின்றன.

இச்சங்கத்தின் நோக்கங்களாவன:—

1. ஜாதி, மதம், வர்ணம், வகுப்பு, ஆண் பெண் வித்தியாசங்களை பொருட்படுத்தாமல், உலக சகோதர மனோபாவத்தை நிலைபெறச் செய்தல்.

2. சகலமதங்கள், தத்துவ சாஸ்திரம், விஞ்ஞானம், பௌதிக சாஸ்திரம் முதலியவைகளை ஆராய்ச்சி செய்தல்.

3. மனிதர்களுக்குள் மறைந்து வெளிப்படை யாகத் தெரியாத இயற்கை நியமங்களையும், சக்திகளை யும் பரிசோதனை செய்து ஆராய்தல்.

இக பர சுகங்களை சமரசப்படுத்தி மேற்கண்ட இம் மூன்று நோக்கங்களையும் அனுசரித்து ஆத்மீக வாழ்க்கை யில் ஈடுபடவும், உண்மையை நாடவும் அவாவுள்ள யாவரையும் இச்சங்கம் வரவேற்கிறது.

மதுரை பிரஹ்மஞான சபை பிரசுரம்-2.

# மௌன வாக்கு

(இரண்டாம் பதிப்பு)

மதுரை பிரஹ்மஞான சபை ஆதரவில்

பிரசுரிக்கப்பட்டது

1954.

விலை ரூ. 0-14-0.] [தபாற்செலவு தனி.

மதுரை
ஸ்ரீ ராமகிருஷ்ண பிரஸில்
1954–ல் பதிப்பிக்கப்பட்டது.

# மௌன வாக்கு.

## இரண்டாம் பதிப்புக்கு முகவுரை.

"மௌனவாக்கு"* என்ற இந்த அரியநூல் நேபாள தேசத்திலும் இமயமலைக்கு வடபாரிசத்தில் நமது பூர்வீக கிரந்தங்களில் "உத்தர குரு" என்றும் நவீன காலத்தில் "திபேத்" என்றும் கூறப்பட்ட பிரதேசத்திலும் உள்ள சில புத்த மடங்களில் குப்த வித்யை பயிலும் மாணவர்களுக்கு ஏற்பட்ட "பொன் மொழி கிரந்தங்கள்"* என்ற நூலில் அடங்கியுள்ளது.

ஆரியஸங்கர், முன் ஒரு ஜன்மத்தில் அதாவது கி. மு. ஏழாவது நூற்றாண்டில் கௌதமராகிய புத்த பகவானது சீஷர்களில் ஒருவராகிய தர்மஜோதி என்பவராய்ப் பிறந்தார். அதற்குப் பிறகு, "பிதகோரஸ்"† என்ற கிரேக்க ஞான ஆச்சாரியாரின் முக்கிய சீஷரான "கிலீநியாஸ்"†† என்பவராய் அவதரித்தார். அதற்குப் பிறகு கி. பி. ஏழாவது நூற்றாண்டில் புஷ்பபுரம் (இக்காலத்தில் பெஷாவர்) என்று வழங்கப்பட்ட நகரில் வஸுபந்து கனிஷ்கர் என்ற நாமந்தரித்து துறவு பூண்டு "அஸங்கர்" என்று பெயர் கொண்டார். அஸங்கர் என்ற நாமம் ஆரிய ஸங்கர் என்று திரிந்தது. இவர் இமயமலைப் பிரதேசத்தில் உள்ள ஒரு மடத்தில் சிலகாலம் தங்கினர். அக்காலத்தில் அம்மடத்தில் உள்ள சீஷர்களுக்கு போதித்த உபதேசங்களில் இந்த "மௌன வாக்கு" கிரந்தத்திலுள்ள மூன்று பிரகரணங்கள் அடங்கியுள்ளன. அவைகளை வரைந்த சீஷர்களின் அபிப்பிராயங்களும் அவைகளில் இங்கு மங்கும் சில இடங்களில் கலந்திருக்கின்றன.

மௌன வாக்கில் 'பிரத்தியேக புத்தரது' நிலை, புத்த பகவான் நிலைக்குக் குறைவாகக் கூறப்படுகிறது. பின் நூதனமாய் ஆரியஸங்கருடைய சீஷர்களால் சேர்க்கப்பட்ட சில பாகங்களிலும் அவ்விதமே கூறப்பட்டாலும் பிரத்தியேக புத்தரது நிலை குறைவானதல்ல. பிரத்தியேக புத்தருடைய மார்க்கம் புத்த பகவானுடைய மார்க்கத்தி

*The Voice of the Silence and Book of the Golden Precepts.
†Pythagoras. †† Kleinias

லிருந்து வேறுபட்ட மார்க்கமென்று அறியவேண்டும். பிரத்தியேக புத்தருடைய மார்க்கம் ஞானத்தை உபதேசிக்கும் ஆச்சாரியாருடைய மார்க்கமல்ல. உலகத்தின் விகாச கதியையும் அதில் உறையும் சராசரங்களின் மேற்போக்கையும் நடத்தும் ஆளுகை அல்லது நிர்வாகத்தைப்பற்றியது. ஆகையால் அந்த மார்க்கம் ஒரு தனிமை யான நிலையை குறிப்பிடுகிறது. அது உலக துயரங்களுக்கும் துக்கங் களுக்கும் அனுதாபமற்றது போலவும் இக்கிரந்தத்தின் 191-வது வசனத்தில் கூறப்பட்டிருக்கிறது. அப்படிக்கூறுவது ஒரு தலைப் பக்ஷமாகும். உண்மையில் பிரத்தியேக புத்தர்களும் பூரண கருணை யோடு கூடியவர்கள்தான். இவ்விஷயத்தை இக்கிரந்தத்தை படிப் பவர்கள் கவனிக்கவேண்டும்.

ஆரிய ஸங்கர், இக்காலத்தில் ஜுவல்கோல்* என்ற பெயருடன் ஜீவன் முக்தராக விளங்குகின்றார். இவர் பிரஹ்மஞான சபையில் சிலருக்கு ஞான மார்க்கத்தை போதித்து உதவி புரிந்திருக்கிறார். H. P. பிளவட்ஸ்கி அம்மையார் இமயமலைப்பிரதேச புத்த மடத்தில் சில வருஷம் தங்கியிருந்து "பொன்மொழி கிரந்தங்களில்" சில பாகங் களைக் கற்று அவைகளிலிருந்து "மௌன வாக்கு" என்ற இந்த கிரந்தத்தை 1889ஸூத்தில் ஆங்கில பாஷையில் மொழி பெயர்த்தார்கள்.

இதின் முதல் பிரகரணம் பொதுவாக உலகப்பற்று நீங்க ஞான மார்க்கத்தைத் தழுவி அம்மார்க்கத்தில் இன்னும் மேற்செல்லும் சீஷருக் குரிய உபதேசமாகக் கொள்ளலாம்.

இரண்டாம் பிரகரணத்தில் 111-வது வசனத்தில் விஞ்ஞானப் பயிற்சியால் உண்டாகும் அறிவுக்கும், ஆத்ம யோகத்தினால் பிரகாசிக் கும் ஞானத்திற்கும் உள்ள பேதம் உபதேசிக்கப்படுகிறது. அவைகளை 127, 128-வது வசனங்களில் முறையே அக்ஷி உபதேசமென்றும், ஹிருதய உபதேசமென்றும் கூறப்பட்டிருக்கிறது.

இன்னும் மேற்செல்ல முயன்றுவரும் சீஷருக்கு, 180-வது வசனத் தில் ஞானமார்க்கத்தின் இரு பிரிவுகளாகிய "பகிரங்கம்", "குப்தம்" என்ற இரு வழிகளின் லக்ஷணங்களும் அவைகளின் நோக்கங்களும் எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன.

---

*Djwal Kul.

குப்த மார்க்கத்தைத் தழுவி அதில் செல்லும் சீஷருக்கு நான்கு தீக்ஷைகள் உள. அவைகளைப்பற்றி 201-வது வசனத்தின் அடிக்குறிப்பில் காண்க. முதற்படியாகிய சுரோதாபத்தி நிலையில் உள்ளவரைப்பற்றி 159, 281, 296-வது வசனங்கள் கூறுகின்றன. அருகரைப்பற்றி 172, 173-வது வசனங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. மோக்ஷம் அல்லது நிர்வாணம் என்ற நிலையை அடைந்தவர்கள் நிர்மாண காயம், சம்போக காயம், தர்ம காயம் என்ற ஆடைகளில் ஒன்றைத் தரிப்பதாக 140, 141-வது வசனங்களில் துலக்கப்பட்டிருக்கிறது. நிர்மாண காயம் ஆடையை தரிப்போர் மோக்ஷ நிலையை பெற்றிருப்பினும் உலகத்தோரின் க்ஷேமத்திற்காக வேண்டும் போது கீழ் உலகங்களில் ஸ்தூல சரீரங்களைக்கொண்டு உலக வாழ்வில் கலந்துழைக்கும் இயல்பினர்கள். சம்போக காயரோ எனில் நிர்வாண லோக சம்பந்தங்கொண்டு இவ்வுலக சம்பந்தத்தை ஒழித்தவர்கள். ஆனால் ஈசுவரனது எவ்வுலகிலும், அவ்வுலகின் க்ஷேமத்திற்காக உழைக்கச் சித்தமாயிருப்பவர்கள். தர்ம காய நிலை கொண்டவர்கள் பரபிரஹ்மம் என்ற பூர்ண சைதன்னியத்துடன் ஒன்றுபட்டு அதற்குக் கீழ்ப்பட்ட உலகங்களின் சம்பந்தத்தை முற்றிலும் துறந்தவர்கள். மேற்கண்ட மூன்று ஆடைகளைத் தரித்தவர்கள் விகாச கதியில் சமநிலை பெற்றவர்களே. ஆனாலும் பௌத்த நூல்களில் கூறப்படும் நிர்வாண நிலைபெற்ற போதிலும் அதைத்துறந்து உலக க்ஷேமத்தின் பொருட்டு உலக சம்பந்தம் பெற்று நிற்கும் நிர்மாண காயர் மற்ற இருவர்களைக் காட்டிலும் உயர்ந்த ஒழிவைக் கைப்பற்றினவராக வர்ணிககிறதுண்டு.

மூன்றுவது பிரகரணத்தில் சீஷர் தாண்டவேண்டிய ஏழு வாயில்கள் கூறப்படுகின்றன. சீஷர் ஏழாவது வாயிலைக்கடந்து 281-வது வசனத்தில் கூறியிருக்கிற பிரகாரம் பூர்ணமான லக்ஷியம் அடைகிறுர்.

மௌனவாக்கின் உபதேசங்கள் நமது வேதாந்த சாஸ்திரங்களின் உபதேசங்களை ஒத்திருக்கின்றன.

இவ்விரண்டாம் பதிப்பில் உதவி புரிந்த மதுரை பிரஹ்ம ஞான சபை காரியதரிசி ஸ்ரீ P. சுப்பிரமணியத்துக்கும், ஷை சபை அங்கத்தினர் ஸ்ரீ P. கோவிந்தராஜுவுக்கும் எனது நன்றி.

*மதுரை,*
17-2-1954

*அ. அரங்கஸ்வாமி அய்யர்,*
அக்ராஸனர்,
*மதுரை பிரஹ்ம ஞானசபை.*

ஓம்.

# மௌனவாக்கு.

---

## நூன்முகம்.

இஃது உயர்நலமடைந்த ஞானமுறை நூல். ஹிமாசலத்தின் கண்ணுள்ள ஞானசபையாகிய வெள்ளியம்பலத்திலொருவராகிய மஹாத்மா ஹைலேரியான்* என்பார் ஹெலினும்பாள் அம்மையார் மூலமாய் இக்காலத்திய ஜனங்களின் பிரயோஜனார்த்தமாக ஆங்கில பாஷையில் இந்நூலை வெளியிட்டிருக்கின்றார். இந்நூலின் கண் உயர்ந்த ஞான விஷயங்களும் நுட்பமான யோக விஷயங்களும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாய் வெளியிடப்பெற்றிருக்கின்றன. இதனருமையையும் பெருமையையும் ஆங்கிலந் தெரியாத ஏனையர்களும் அறிந்தனுபவித்து ஞானமுறையி லொழுகுமாறு இதைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளேன்.

ஓம் தத் ஸத்.

1911 ப. நாராயணன்.

---

*ஜுவல்கோல் என்ற மற்றொரு மஹாத்மா முன்பு 'மௌன வாக்கு' அடங்கியுள்ள பொன்மொழி கிரந்தத்தை கோடீகரித்தார்.

## பொருளடக்கம்.


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | முதல் பிரகரணம் | 1 |
| 2. | இரண்டாம் பிரகரணம் | 24 |
| 3. | மூன்றும் பிரகரணம் | 47 |

ஓம்.

முதல் பிரகரணம்.

# மௌன வாக்கு.

---

1. கீழான சித்தி† முறைகளின் அபாயங்களை அறியாதாருக்கு அடியில் வரும் உபதேசங்கள் ஏற்பட்டன.

2. அதன் உண்மையை அறியவும், மௌனம் கடந்த வாக்கை அதாவது நாதத்தொனியைக் கேட்கவும் விரும்புவான், தாரணையின்* இயல்பை அறியற்பாலன்.

3. சீஷன், இந்திரிய சம்மந்தமான விஷயநுகர்ச்சியில் வெறுப்புற்று, இந்திரியங்களின் அரசனை நாட வேண்டும். அந்த அரசன் என்பது சங்கற்பங்களையும் பிரமையையும் உண்டுபண்ணும் மனமாம்.

4. மனம் சத்தைக் கொல்லும் கொடுந் தன்மையது, உண்மையை மறைத்து மருளை உண்டுபண்ணும் தன்மையது.

---

†சித்திகள் இருவகைத்து. ஒன்று கீழானது, இழிவானது, காம மனத்தின் மலர்ச்சியால் உண்டாக்கப் பெற்றது. மற்றொன்று, மனோ நிக்கிரகத்தால், உண்டாகும் ஆத்ம சக்திகளின் மலர்ச்சியாம். இப் பின்னதைப்பற்றி ஸ்ரீமத் பாகவதத்தில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் அடியில் வருமாறு உபதேசிக்கின்றார்:—

"யோகாப்பியாச முள்ளவர்களாய், இந்திரியங்களை அடக்கி, மனத்தை ஒருமுகப்படுத்தி என்னிடம் ஸ்திரமாய் வைத்து, ஒழுகுகின்றவர்களை, சித்திகள் பணிவிடைசெய்ய எப்போதும் காத்துக் கொண்டிருக்கின்றன."

* இந்திரியங்கள் சம்பந்தமான வெளி நோக்கான பிரபஞ்சத்தின் பார்வையைத் தவிர்த்து, அந்தர்முகம் பெற்று, உள்ளத்தில் யாதேனும் ஒரு லக்ஷியத்தில், மனம் ஐகாக்ரியம் பெறும்படி செய்தல், ஒரே பிடியாய் ஒருமுகப்படும்படி செய்தல், தாரணை எனப்படும்.

5. சீஷன், அந்த சத்தை (உண்மையை)க் கொல்லும் மனத்தைக் கொல்லவேண்டும்.

ஏனெனில்:—

6. கனவிற் காணும் உருவங்கள் நனவில் பொய்யாகத் தோன்றுமாறு போல, தன் உருவமும் பொய்யாகச் சீஷனுக்குத் தோன்றுமாகில்,

7. பன்மை (பல வேற்றுமைகள்) தோன்றுமல் இருக்குமாகில், அப்போது, ஒன்றை அறிவான். அதுவே வெளி நோக்குதலைக் கொல்லும் தன்மையதாகிய உள்ளத்தில் தொனிக்கும் நாதம்.

8. அது தோன்றினல்தான், சீஷன் பொய்யான பிரபஞ்சமாகிய பிரமையைத் துறப்பான், மெய்யான நிலையை அடைவான்.

9. மனம் உண்மையைப் பார்க்குமுன், உள்ளத்தில் சாந்தமும் நேர்மையும் அமையவேண்டும். ஊனக் கண்கள் வெளிமயக்கத்தைப் பாராத் தன்மையைப் பெற வேண்டும்.

10. மனம் உண்மையைக் கேட்குமுன், இந்த ஸ்வரூபமான மனிதன், பெரிய ஆரவாரத்தையும் நுண்ணிய குசுகுசுப்பையும் யானை முழக்கத்தையும் பொன் வண்டின் கிண் கிண் என்ற ரீங்காரங்களையும், சிறிய ஒலியாயினும் பேரொலியாயினும், இவைகளை ஒரே மாதிரியாகக் கேட்காத் தன்மையைப் பெற வேண்டும்.

11 மனம் உண்மையாக அறியுமுன், உண்மையான ஸ்மரணையைக் கொள்ளுமுன், குயவன் மனத்தின் கண் இனிவனையப்பெறும் பாண்டத்தின் உருவம் ஒருமைப்

பட்டு அமையுமாறு போல, உள்ளத்தின்கண் நிற்கின்ற பேசாத நாதத்துடன் (மௌன வாக்குடன்) ஒருமைப் படவேண்டும்.

12. அதனால், அப்போதுதான், மனம்கேட்கும். மனம் ஸ்மரணை பெறும்.

13. அப்போது, மௌனம் கடந்த நாதமானது உட்காது கேட்கும்படி சீஷன் உள்ளத்தில் அடியில் வருமாறு வசனிக்கும்:—

14. உலக வாழ்வின் உயர்நலத்தில் மூழ்கி நீ இருக்கும் போது, உன் மனம் மகிழ்ந்து புன்னகை கொள்ளுமாகில், கூட்டில் அடைபெற்ற புறாப்போல ஊனான உடம்பின் கண் இருப்புக்கொண்டு, உன் மனம் உவந்து களிப்பாய்க் கானம் செய்யுமாகில், மாயக் கோட்டையில் (சரீரத்தில்) உன் மனம் நொந்து அழுமாகில், உள்ளத்தில் தங்கும் உன் நாதனாகிய ஆத்மாவுடன் சம்பந்திக்கும் வெள்ளி போன்ற நுண்ணிய நூலிழையை அறுத்தலில் உன் மனம் முயன்று போராடுமாகில், ஓ! சீஷனே! உன் மனம் உலகப்பற்றுள்ளதென அறிவாய்.

15. (ஞான முறையில் பிரவேசிக்க எத்தனம்கொண்டு எழும்) உன் மனம் உலகச் சந்தடியைக்கேட்க பிரியப் படுமாகில், உலகமென்ற மஹாமாயையின் ஆரவாரத் தைக் கேட்டு அதற்கிணங்கி ஒற்றுமைப்பட்டு உன் மனம் வசனிக்குமாகில், துன்பத்தினால் சொரியும் கொதிப்பான கண்ணீரைக் கண்டு பயந்தும், துக்கத்தின் அழுகை இரைதலில் உன் காது அடைபெறும் சமயத்தில், சுய நலம் என்ற ஓட்டின்கண் கூச்சமுள்ள ஆமை அவய வங்களை இழுத்துக்கொண்டு சுருங்குமாறுபோல், உன்

மனம் இளகாமல் சுயநலம் கொண்டு உள் நோக்குமாகில், ஓ சீஷனே! மௌன நாதனை உறைவிடமாகக் கொள்ள உன் மனம் யோக்கியதையற்றது, தகாதது என அறிவாய்.

16. உன் மனம் மேன்மேலும் (உலகப்பற்றில்) பலமாய் விருத்தியாகிக்கொண்டு வரவும், சாவதானமான ஏகாந்தத்தை விட்டு, உன் மனம் வெளியேறியும், தன்னைக் காப்பாற்றும் கவசம் போன்ற அவ்வேகாந்த நிலையைத் தவிர்த்தும், வெள்ளி போன்ற உலகப் பற்று என்ற நூலை வெளிக்கிளம்பச் செய்தும், விஷயங்களைக் கண்டு தீவிரமாய்ப் பாயுமாகில், ஆகாச அலைகளில் தன் பிரதிபிம்பத்தை நோக்கி மயங்கி, இதோ நான் என்ற அகங்காரச்சிந்தையைக் கொள்ளுமாகில், உன் மனம் பிரமையின் வலையில் சிக்கிக்கொண்டது எனத் தெரிவாய்.

17. சீஷனே! இவ்வுலகம் துக்கத்திற்கு இருப்பிடம். சோதனையான இந்த உலக வாழ்க்கை நெறியில், உன்னை மயக்கி, அவித்தை வசமாக்க, உன்னைப்பிடிப்பதற்குப் பொறிகளும், கண்ணிகளும், அமைக்கப்பட்டிருக்கின்றன. நீ வேறு நான் வேறு என்ற பிரமை சிந்தனையே இதற்குக் காரணமாம்.

18. அறிவிலியான சீஷனே! சத்திய ஜோதி உள்ள பூமி ஒன்று உள்ளது. நூலின்றியும், எண்ணெய் இன்றியும் ஜ்வலிக்கின்றதும், காற்றால் அணைக்க இயலாதது மான ஜோதி அது. அப்பூமியில் புகுமுன், சந்தியை வெளிச்சம் போன்ற நிலை ஒன்றுள்ளது. அந்த சந்தியை வெளிச்சமுள்ள நிலைக்கு இந்த உலகம் பயங்கரமானதும் துக்ககரமானதுமான வாயில் என்று அறிவாய்.

19. உயர்நலம் அமைந்த தர்மவிதியின் உபதேசம் யாதெனில், "எல்லாமடங்கும் பிரஹ்ம ஞானியாகுமுன் முதலில் தன்னைத் தான் அறியும் ஆத்மஞானியாக வேண்டும்." ஆத்மாவை அறியவேண்டுமென்றால், தன்னை (அகந்தையை)த் துறக்கவேண்டும்: மமதையைத் தவிர்க்க வேண்டும். அதனால், காலஹம்ஸம் என்ற கம்பீரமான பக்ஷியின் இரு பக்ஷங்களின் மத்தியில் சாந்தமாய்த் தங்கலாம். அஜமாயும், மரணமற்றதாயும் கல்ப கோடி காலங்கள் உள்ளதுமான "ஓம்" என்ற அந்தக் காலஹம்ஸத்தின் இறக்கைகளின் மத்தியில் தங்குதல் சுகமே! ஆம்! உண்மையில் சுகமே!.

20. அறிய விரும்புவாயாகில், பிராணாதாரமான அந்தப் பக்ஷியின்மேல் சவாரி செய்வாய். (அதாவது பிரணவ உபாஸனை கொள்ளுவாய். கர்மங்கள் உன்னை அணுகா. கோடானுகோடி பாபங்களினின்று விடுபடுவாய்.)

21. உண்மையாய் உன் ஆத்மாவை ரக்ஷிக்க விரும்புவாயாகில் (உடலையும் ஊனையும் ஓம்பற்க), அவைபற்றிய உயிர்வாழ்வைத் தவிர்.

22. களைத்துச் சோர்வடைந்த பிரயாணியே! மூன்று பூமிகளின் அனுபவமானது சிரமங்களின் முடிவை உண்டுபண்ணும். மாரனாகிய தீயவனை வசப்படுத்தும் தீரனே! இம் மூன்று பூமிகள் மூன்று பிரஞ்ஞா நிலைகளாம். அவை ஜாக்கிரதை, ஸ்வப்னம், ஸுஷுப்தி என்ற அவஸ்தைகளாம். அவைகளைத் தாண்ட, 4-வதான

பிரஞ்ஞா பூமி துரியம் என்பார்; அதற்கப்பால் 7 பிரஞ்ஞா பூமிகள் இருக்கின்றன. இப் பூமிகள் எல்லாம் நித்திய மான சாந்தநிலையின் பல படிகளாம்.

23. அவைகளின் பெயர்களை அறிய விரும்புவாயா கில் அவையாவன:—

24. முதல் பூமி என்பது அவித்யா ஸ்தானம்.

25. அதில் சரீரம் எடுத்து விழித்தாய்; பிறந்தாய்; அதில் ஜீவிக்கின்றாய்; இனி இறப்பாய்; (வியாவகாரிக லோகம் இது.)

26. இரண்டாம் பூமி, இனி நீ படித்துப் பழகி உண்மை யை அறிய முயலவேண்டும் ஸ்தானம். அதின்கண் நீ உல கத்தில் செய்த கர்மங்களின் பயன்களான புஷ்பங்களைப் பார்ப்பாய்; ஆனால் ஒவ்வொரு புஷ்பத்தினிடமும் ஓர் ஸர்ப்பம் சுற்றி மண்டலமிட்டிருப்பதைக் காண்பாய். இதுவே புவர்லோகம் (அதில் எல்லாம் மருளும் மயக்க முமாக இருக்கும்).

27. மூன்றாம் பூமி ஞான பூமி. அதற்கு அப்பால் பூர்ணஞான ஊற்றுக் கண்ணுள்ளதும் எல்கையற்றதும் நித்தியமானதுமான அக்ஷரம் என்ற நீர்நிலைபெருக்கு விஸ் தரித்து இருக்கிறது.

28. முதல் பூமியை ஸாவதானமாய்த் தாண்ட விரும் புவாயாகில், உலகவாழ்வின் காமாக்கினியைக் கண்டு ஞானசூரியனின் ஒளி என மயங்கி மோசம் போகாதே.

29. இரண்டாம் பூமியை ஸாவதானமாய்த் தாண்ட விரும்பினுல், அதில் தோன்றிடும் பகட்டான புஷ்பங் களின் சுகந்த வாசனைகளை முகருவதற்குத் தங்காதே: அவைகளின் வசமாகாமல் நீ தப்பினுல், கர்மபந்தங்களி னின்று விடுபடுவாய். அந்த மாயாபூமியில் உன் குருவைத் தேடாதே.

30. அறிஞர்கள், இந்திரியங்களின் இனிய விஷய நுகர்ச்சி நிகழுமிடங்களில் தங்கார்.

31. மாயையின் மயக்கமான இனிய வசனங்களுக் குச் செவிகொடார்.

32. உனக்கு இரண்டாம் பிறப்பைக் கொடுப்பவரும், ஞானதீக்ஷை அளிப்பவருமான குருவை மூன்ரும் ஸ்தா னமாகிய ஞானபூமியில் தேடு. (அந்த பூமியிலோ மயக்கங் கள் இல்லை.) நிழல்கள் கிடையா. அங்கே எப்போதும் குறைவில்லா மஹிமையுடனே சத்தியம் என்ற ஞான சூரியன் பிரகாசிக்கிருன்.

33. சீஷனே! அஜம் (பிறக்காத) என்று சொல்லப் பெறும் ஒரு வஸ்து உன்னிடமும் அந்த 3-ம் ஸ்தானத் திலும் உள்ளது. அதை அடையவும், அதாவது, இரண்டும் ஒன்றுபடச்செய்யவும் விரும்புவாயாகில், மயக் கத்திற்குக் காரணமாம் உன் இருண்ட கோசங்களைக் கழற்ற வேண்டும். ஊனின் வார்த்தையைக் கேட்காதே. இந்திரியங்களின் தோற்றம், உனக்கும் அந்த ஞானஒளிக் கும் மத்தியில், வராமல் இருக்கட்டும்; அப்போது நீயும் அந்த ஒளியும் ஒன்றுபடும். உன் அஞ்ஞானத்தை அறிந்து

இரண்டாம் பூமியைவிட்டுத் தப்பி ஓடிவிடு. இந்த இரண்டாம் ஸ்தானம் பிரமை உண்டுபண்ணுதலில் வஞ்சகமான வனப்புள்ளது என்பதை அறி.* நீ பழக வேண்டியே இஃது ஏற்பட்டது. சிஷனே! அதன் பிரமையை உண்டுபண்ணும் தேஜஸால் மயங்கி உன் மனம் அதில் அகப்பட்டுத் திகைப்புக்கொள்ளாமல் எச்சரிக்கையாக விரு.

34. இத் தேஜஸ் பெரிய மாயாவியாகிய மாரனது மோசமான காரியம். இந்திரியங்களை மயக்கும். மனத்தைக் குருடாக்கும். ஜாக்கிரதையற்றவனை நாசப் படுத்தும்.

35. இராத்திரி ஜ்வலிக்கும் தீபத்தைக் கண்டு மயங்கி விளக்கெண்ணையில் விழுந்து மாண்டுபோகும் அந்துப் பூச்சியைப்போல, ஜாக்கிரதையற்றவன் அதை மயக்க மான தேஜஸ் என்று அறியாமல் மாண்டு போவான். மாரனின் அடிமையாகி இப்பூமிக்குத் திரும்புவான்.

36. ஜீவாத்மகோடிகளைப் பார். ஸம்ஸாரமென்ற கொந்தளிப்புள்ள கடலில், அவைகள் தத்தளிக்கின் றமையைக் கவனிப்பாய். சோர்வடைந்தும், இளைத்தும், சங்கடங்களால் வருந்தியும், மனக்கலக்கமுற்றும், சக்தி யற்றும், ஒன்றின்பின் ஒன்ருய்ப் பொங்கும் அலைகளில் வீழ்ந்து மாளுகின்றன. கொடுமையான காற்ருல் அங்கு மிங்கும் மோதப்பட்டும், புயற்காற்ருல் துறத்தப்பட்டும், சுழிகளில் போய் விழுந்து (முன்னிருக்கும்) முதல் பெருஞ்சுழலில் விழுந்து மறைகின்றன.

---

* கட உபநிஷத்தின் முதல் அத்தியாயம் 20 முதல் 28 வரையுள்ள மந்திரங்களைப் பார்க்க.

37. மூன்றும் ஸ்தானமாகிய ஞானபூமியின் வாயிலால், ஆனந்தபதத்தை அடைய விரும்புவாயாகில், சீஷனே! நீ வேறு, நான்வேறு என்று உன்னை வேற்றுமைப்படுத்தும் தன்மையதாகிய பயங்கரமான அவித்தையின் வசமாகாமல், உன்னுடைய இந்திரியங்களைப் பாதுகார்ப்பாய். அவைகள் செல்லும் வழிகளை நன்றாய் அடைத்துவிடு.*

38. 'தேவலோக ஜனிதமானதும்,' மாயா சமுத்திரத்தில் மூழ்கியிருக்கிறதுமான உன் ஆத்மா பிதாவாகிய பரமாத்மாவினுடைய சம்பந்தத்தை விட்டு விலகாதிருக்கட்டும். தகிக்கின்ற (குண்டலினி) சக்தியானது பிரஹ்ம புரமாகிய உன் ஹிருதய குகையில் போய் அடங்கட்டும். அதுவே லோகமாதாவின் இருப்பிடம்.

39. பின்பு ஹிருதயத்தினின்று, 6-ம் ஸ்தானமாகிய கண்களுக்கு மத்தியிலுள்ள புருவ மத்தியஸ்தானத்திற்கு அந்த (குண்டலினி) சக்தியானது ஏறட்டும். அப்போது அஃது எங்கும் பரவியுள்ள வாக்கான உன் குருநாதனின் வாக்காகவுமிருக்கின்ற ஏகாத்மாவின் சுவாஸமாக ஆகிவிடும்.

40. அப்போதுதான் நீ ஆகாசத்தில் "நடக்கின்றவனாக" ஆதல் கூடும். ஜலங்களைத் தொடாமல், அலைகளின்மேல் வாயுமண்டலத்தில் நடமாடலாம். †

---

* "மாறிநின்று என்னை மயக்கிடும் வஞ்சபுலனைந்தின் வழியடைத்தமுதே!" என்ற மாணிக்கவாசகரது வசனம் இங்கு கவனிக்கத்தக்கது.

† **குறிப்பு:—** யோகியின் உடல் காற்றால் அமைந்தது போலவும், அங்கங்கள் முளைத்திருக்கிற மேகம் போலவும், ஆகும். சமுத்திரத்திற்கப்பாலும், நக்ஷத்திரங்களுக்கப்பாலும், உள்ளவைகளைப் பார்ப்பான். தூரதிருஷ்டி ஏற்படும். தேவர்களின் பாஷையைக் கேட்பான்; எறும்பின் மனத்தில் உள்ள எண்ணங்களையும் அறிவான்:— தியானேசுவரி.

41. குப்தமான திவ்விய நாதங்கள்கொண்ட ஏணியின் மேற்படியில் நீ அடிவைக்குமுன், உன்னுள்ளத்திலிருக்கின்ற நாதனின் வாக்கை ஏழுவிதமாக நீ கேட்கும் இயல்பினனாகவேண்டும்:—

42. முதலாவது தொனி— இரவிற்பாடும் குருவி தன் இணையை விட்டுப் பிரியும் சமயத்தில், பாடும் இனிமையான கானம் போன்றதாம்.

43. இரண்டாவது—மினுமினுக்கின்ற நக்ஷத்திரங்களை விழிப்பிக்கும் தியானிகளான தெய்வநிலை பெற்றோரின் வெள்ளிக் கைத்தாளத்தின் நாதத்தை ஒத்ததாம்.

44. மூன்றாவது— கிளிஞ்சல்போன்ற கவசத்துக்குள் அடைக்கப்பட்டிருக்கின்ற ஓர் சமுத்திர பூதத்தின் இனிமையான புலம்பல் போன்றதாம்.

45. நான்காவது— வீணையின் தொனி போன்றதாம்.

46. ஐந்தாவது — புல்லாங்குழலின் கிறீச்சு என்ற சப்தம் போன்றதாம்.

47. ஆறாவது— எக்காளம் அல்லது பெருஊதின் பெரு சப்தம் போன்றதாம்.

48. ஏழாவது— மழை மேகத்தின் மந்தமான இடி முழக்கம் போன்றதாம்.*

---

* குறிப்பு:— நாத பிந்து உபநிஷத்தின் முதலாம் அத்தியாயத்தில் பதினொன்று நாதங்கள் பிரஸ்தாபிக்கப்படுகின்றன. அவையாவன:— 1. சமுத்திர அலை, 2. மேகங்களின் முழக்கம், 3. பேரிகை, 4. மலையருவி, 5. மிருதங்கம், 6. கண்டாமணி, 7. நாகஸ்வரம், 8, கிங்கிணி, (சலங்கை ஓசை) 9. புல்லாங் குழல், 10. வீணை, 11. பிரமரத்தின் (வண்டின்) ரீங்காரம். இவைகளில் 1 முதல் 4 வரை முதல் படியிலும், 5 முதல் 7 வரை இரண்டாம் படியிலும், 8 முதல் 11 வரை மூன்றும் படியிலும், இவைகளுக்கும் அப்பால் மஹாசூக்ஷ்மமான நாதங்களும் கேட்கப்படும்.

49. இந்த ஏழாவது, மற்ற நாதங்களை விழுங்கும் தன்மையது. அவைகள் ஓய்கின்றன. அவைகள் இனிக் கேட்கப்படாவாம்.

50. மனிதனின் கீழான ஆறு தத்துவங்களும் அறுபடுமாயின், அதாவது அவைகள் அடங்கப்பெறின், அவை குருநாதன் பாதங்களில் அர்ப்பணமாக வைக்கப்படுமாகில், பின்பு சிஷன் ஆத்மாவுடன் ஏகீபாவத்தை அடைகிருன், பிரஹ்மமாகிருன் ,அங்கிலேயில் தங்குகிருன்.

51. இந்நெறியில் பிரவேசிக்கும் முன், காம சங்கற்பங்களினின்று உன் அசுத்த மனத்தை சுத்தம் செய்ய வேண்டும்; உன் மனேமயகோசம் தூய்மையாகவேண்டும். உன் ஹிருதயம் பரிசுத்தம் பெறவேண்டும்.

52. நித்தியமான பிராணனின் ஸ்படிகம் போன்ற தெளிவான சுத்த ஜலங்கள், புசல் காற்ருல் அலே கொண்ட வண்டலும் சேறுமுள்ள அசுத்த ஜலப்பிரவாகங்களுடன், ஒன்றுபடா.

53. உதய சூரிய கிரணத்தில் ஜ்வலிக்கின்ற ஆகாசத்தினின்று தாமரைப் புஷ்பத்தின் மத்தியில் படிந்த பனித்துளி பூமியில் நழுவிவிழ, களிமண்ணுக ஆகின்றது! முன் முத்துப்போன்றது இப்போது மண்மாசாகத் தோன்றுவதைப் பார்!

54. உன் அசுத்த சிந்தனைகள் உன்னே மேற்கொண்டு, உன்னே வசப்படுத்து முன், அவைகளுடன் போராடி அவைகளை ஜயிப்பாய். அவைகள் உன்னே, அடிமையாகச் செய்யக்கூடியது போல், அவைகளே உனக்குச் சேவகர்களாகச் செய்து கொள்வாய். அவைகளுக்கு இடங்

கொடுத்தால், அவைகள் வேரூன்றி வளரும். கடைமுறையில் உன்னை மயக்கி வசப்படுத்தும். உன்னைக் கொல்லும். அவைகளைப்பற்றி ஜாக்கிரதையாக இரு. அவைகளினுடைய நிழலாய் இருந்தாலும் அதற்குக் கொஞ்சமேனும் இடங்கொடாதே. ஏனெனில் நிழல் போன்றதே, பின் வளரும்; உருவத்திலும் சக்தியிலும் விருத்தியடையும். இந்த இருள்போன்ற நிழலே, அதாவது இந்த அருவருப்பான வஞ்சனையான கறுத்த ஸ்வரூபம் இன்னது என்று நீ உணர்ந்து அறியு முன்னமே, உன் முழு உயிரையும் உறிஞ்சிவிடும்.

55. சீஷனே! முன் பிரஸ்தாபித்த அந்த குப்தமான குண்டலினிசக்தியின் உதவியால், நீ தேவசுபாவம் பெறுமுன், உன் காம சரீரத்தை இஷ்டப்படி கொல்லும் சக்தியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

56. ஆநாத்மாவும் ஆத்மாவும் இரண்டும் சந்திக்க மாட்டா. இரண்டில் ஒன்று தொலையவேண்டும். இரண்டும் சேர்ந்து தங்க ஓரிடமுமில்லை.

57. உன்மனம் மெய்யுணர்வுபெறுமுன், அகந்தை என்ற பூண்டு வேரோடு அறவேண்டும். திரும்பாதபடி (வேற்றுமைப்படுத்தும்) இந்திரிய நுகர்ச்சி என்ற புழுவை நசித்தல் வேண்டும்.

58. நன்னெறியில் நடக்குமுன், அந்நெறியாக நீ ஆதல் வேண்டும்.

59. தாமரைப் புஷ்பமானது உதய சூரியனின் கிரணத்தைப் பானம் பண்ணுமாறு மலர்ந்து தன் உள்ளத்தைத் திறந்து வெளிக்காட்டுவதுபோல, ஒவ்

வொரு துக்க அழுகையையும் உன் மனம் கேட்ப தாகட்டும்.

60. துக்கம்கொண்டவனின் கண்ணீரை நீ துடைக்கு முன் சூரிய வெப்பத்தாற் போல அது உலராமலிருக் கட்டும்.

61. தபிக்கின்ற ஒவ்வொருவனுடைய துக்கக்கண்ணீ ரும் உன் ஹிருதயத்தில் விழட்டும்; அங்கேயே தங்கட்டும். அக்கண்ணீருக்குக் காரணமாம் துக்கத்தை நீ நிவிர்த்திக் குமுன் அதைத் துடைத்துவிடாதே.

62. இரக்கமுடைய நெஞ்சத்தினனே! இக்கண்ணீர்ப் பெருக்கால் ஏற்படும் வாய்க்கால்கள் தான் நித்தியமான அன்பு என்ற வயல்களுக்குப் பாசனவாய்க்கால்கள். அந்த அன்பு என்ற வயலின்கண் நிசிராத்திரியில் புத்தர் என்ற புஷ்பம் மலரும்! அன்பின் பயனால் உலக குருவாகத் தோன்றுவர். இத்தன்மையராக அவதரித்தல் மிகவும் துர்லபம். இது அபூர்வமான காட்சி; வோகே * மரத்தின் புஷ்பத்தைக் காண்டல் எவ்வளவு அரிதோ அவ்வளவு அரிது. இத்தன்மையான நிலைமையைப் பெறுதல் இனிப்புனர்ஜன்மம் இன்மையின் வித்தாகும். அது அர்ஹரை உலகப்போரினின்றும், காமத்தினின்றும், பிரத்தியேகப்படுத்தும். அவர் பல பிரஞ்ஞா பூமிகளின் வழியாகச்சென்று, கடைசியில் சாந்தமும் சுகிர்தமுமுள்ள பதவியை அடைவார். அஹங்காரமற்று மௌன நெறி பற்றியவரே அதை அறிவார்.

* ஓர்வித மரத்தின் பெயர்.

63. ஆசையை அறுத்துவிடு. அறுத்தபின், அது திரும்ப உண்டாகாமலிருக்கும்படி கவனம் கொள்.

64. பிராணனின் அபிமானத்தை (உயிர் ஆசையை)க் கொல்லு. உயிரின் மேலுள்ள ஆசையைக் கொல்லுகிறது என்றால், நீடூழிகாலம்வரை அவ் வாழ்வை மட்டும் விரும்புவது அல்ல. அநித்திய உயிர் வாழ்வை முற்றிலும் விட்டு நித்தியமான உயிர்வாழ்வு வேண்டற்பாலது என்பதாம்.

65. ஒன்றையும் விரும்பாதே. கர்மகதியைக்கண்டு சினம் கொள்ளாதே. மாருத பிரபஞ்ச தர்ம விதிகளைக் கண்டு கோபம் கொள்ளாதே. அநித்தியமானவைகளுடனேயும், அழியக்கூடியவைகளுடனேயும், தற்சமயம் அடைந்திருக்கிற பிரகிருத ஜன்மத்துடனேயும், க்ஷணிகமிருக்கும் இயல்பினதானவைகளுடனேயும், போராட்டம் கொள்ளு.

66. பிரபஞ்ச தர்மத்துடன் இசைந்து நேர்மையாகத் தொழில் புரி. அதனால் உனக்குப் பயனுண்டு. பிரபஞ்சம் உன்னை ஒரு சிருஷ்டி கர்த்தனாக மதிக்கும். உன் வசமாகும்.

67. அதன் குப்தமான விஷயங்கள் உனக்குத் தெளிவாய்த் தோன்றுவதாகும். அதன் அந்தர்கதமாயுள்ள பாக்கியங்கள் உன் அகக்கண்ணுக்கு வெளிப்படையாகும். உன்னுடைய திவ்விய திருஷ்டிக்கு நிதி நிக்ஷேபங்கள் தெரியவரும். என்றும் மூடாத எப்போதும் விழிப்புள்ள அந்த திவ்வியதிருஷ்டிக்கு, பிரபஞ்சத்தின் எந்த வர்க்கங்களிலும், மறைவானவை ஒன்றும் இல்லை.

68. பின்பு அவைகளை அடைய வழியும் முறையும் உனக்குத் தெரியவரும். முதல் வாயில், இரண்டாம் வாயில், மூன்று முதல் ஏழாம் வாயில் வரை வாயில்கள் உண்டு. அதன் பிறகு, லக்ஷியமான நிலை தோன்றும். அதற்கு அப்பால், ஊனக் கண்ணால் பார்க்கக் கூடாததும், ஞானக்கண்ணால் மாத்திரம் பார்க்கக்கூடியதும், வாயால் சொல்ல வொண்ணாததுமான, ஆத்ம சூரியப்பிரகாசத்தில் தோய்ந்த மஹிமைகள் இருக்கின்றன.

69. இந்த லக்ஷியமான நிலைக்கு ஒரே வழிதான். அவ்வழியின் முடிவில் 'மௌனம் கடந்த நாதம்' கேட்கும். இம்முறையின் அப்பியாசி ஏறும் ஏணியானது துன்பம், துயரம் என்ற படிகளால் அமைக்கப்பெற்றிருக்கிறது. புண்ணியம் என்ற ஸாதனத்தால்தான் இத்துன்பம், துயரம் என்ற படிகளை அடிவைத்து ஏறலாம்; ஒரு அற்பமான தீய விஷயங்கூட உன்னிடம் இருத்தல் கூடாது. அதை முற்றும் விட்டுப் படியேற வேண்டும். அது இருந்தால், நீ கெடுவாய். ஏணி முறிந்து விழும். நீ கீழே சாய்ந்து விழுந்து விடுவாய். அந்த ஏணி தீயவையான உன் பாடங்களின் சேற்றில் நாட்டப்பெற்றிருக்கிறது. பிரகிருதி என்ற விஸ்தாரமான பாழைத் தாண்ட எத்தனிக்குமுன், தியாகம் என்ற ஜலத்தால், உன் பாதங்களைக் கழுவி சுத்தம் செய்தல் வேண்டும். இந்த ஏணியின் அடிப்படியிற்கூட, அசுத்தமான பாதங்களை வைக்காமலிருக்கும்படி எச்சரிக்கையாக இரு. தவறினால் துன்பத்திற்கு உள்ளாவாய். பாதங்களில் இருக்கின்ற அசுத்

தமான பாபகிரஸ்தமான சேறு உலரும்; பிசுக்குப் பிசுக்கென்று ஒட்டிக்கொள்ளும்; மேலே ஏறவொட்டாமல் இருந்த விடத்திலேயே தங்கும்படி வச்சிரப் பசைபோலப் பிடித்திழுக்கும். பக்ஷியைப் பிடிக்கும் வஞ்சகனுன வேடனுடைய வலையின்கண்ணுள்ள ஒட்டுப் பிசினில் அகப்பட்டுக்கொண்ட பக்ஷிபோல, மேலேற முடியாமல் சீஷனுனவன் தடைப்பட்டுத் தத்தளிப்பான். அவன் செய்த பாபங்கள் ஸ்வரூபப்பட்டு, அவனைக் கீழ்நோக்காக இழுக்கும். சூரியன் மலைவாயில் விழுந்தபிறகு, நரி சிரித்து ஊளை இடுகிறதுபோல, அவன் பாபங்கள் ஆரவாரிக்கும், கூச்சலிடும். அவன் எண்ணங்கள் பெரிய ஸைன்னியமாகப் பெருகும். அவனை அடிமைப்படுத்திக்கொண்டுபோம்.

70. அப்புண்ணிய மார்க்கத்தில் முதல் அடி வைக்குமுன், சீஷனே! உன் ஆசைகளை அறுத்துவிடு. உன் தீய செயல்களின் வலிமை குறையட்டும்.

71. அந்த ஞான ஏணியின்மேல் ஒரு அடி வைக்குமுன், இனி உண்டாகாமல் உன் பாபங்களைத் திக்குமுக்காடச்செய். அவைகள் என்றும் ஊமையாக இருக்கும்படி செய்.

72. உன் மனத்தின்கண் எண்ணங்கள் எழாமல் அடக்கு. உன் ஊனக்கண்ணுக்கு இன்னும் தோன்ருதவரும், ஆனுல், இருக்கிருர் என்று உன் மனத்தினுல் உணரப்படுபவருமான உன் குருநாதன்மேல் ஒருநிலைப்பட்ட சிந்தையை வை.

**73.** உன் உட்பகைவர்கள் (காமக்குரோதலோப மோகங்கள் முதலியவை) உன்னைத் தாக்காமலிருப்பதற்காக, எல்லா இந்திரியங்களையும் ஒன்றில் லயப்படுத்து. உன் மூளையின் குகையின்கண் மறைந்து ஒடுங்கியிருக்கின்ற அந்த இந்திரியத்தின் மூலமாய்த்தான், உன் குருநாதனை நோக்கிச் செல்லும் செங்குத்தான மார்க்கம் மங்கலாய் உன் மனக்கண்ணுக்கு வெளியாகும்.

**74.** சீஷனே! உன் முன்னுள்ள மார்க்கம் நீண்டது, அலுப்புக்கொள்ளக்கூடியது. நீ கடந்துபோன விஷயத்தைப்பற்றி யாதேனும் ஒரு சிந்தனை கொண்டால் அது உன்னைக் கீழ்நோக்கித் தள்ளும்: திரும்பவும், நீ ஏணியேற ஆரம்பிக்கவேண்டுவதாகும்.

**75** சென்ற அநுபவங்களைப்பற்றிய ஸ்மரணையைத் தவிர், பின் நோக்காதே. நோக்கில் மோசம் போவாய். இழந்தாய்.

**76.** காமனைகளுக்கு உணவு கொடுத்துத் திருப்தி செய்து அவைகளை அறுக்க முடியும் என வீணாக நம்பாதே. மாரனால்* தூண்டப்பட்ட இந்த விபரீத எண்ணம் வஞ்சனையானது. இதைத்தவிர். தீய கர்மத்திற்கு உணவு கொடுத்தால், அது விருத்தியாகும், விரியும், பலப்படும். அது புஷ்பத்தில் விழும் புழு அதன் கண்ணுள்ள சத்தை உறிஞ்சி, அதைப் பாழாக்குதல் போலாம்.

---

* (ஆத்மாவை) கொல்லுகிறவன். இதற்கு முன்னும், இதற்குப்பின்னும் பல இடங்களில் கூறப்படும் 'மாரன்' என்பவன் விகாஸ கதிக்குத் தடைசெய்யும் மனிதனது தீய குணங்களை உருவகப் படுத்தும் அசுரன் போலாவான்.

77. புல்லூரிப் பூச்சி உண்டாகி ரோஜாச் செடியின் ஹிருதயத்தைக் குடைந்து அதன் ஜீவரஸத்தைப் பானம் பண்ணுமுன் அந்த ரோஜாப் புஷ்பம் திரும்பவும் அச் செடியின் அடிக் கிளையில் பிறந்து மொட்டாகவேண்டும்.

78. புயல் காற்றால் அடிமரம் அடிபட்டு உலர்ந்து போகுமுன், பொன் போன்ற மரம் தன் அழகான மணி போன்ற மொட்டுக்களை வெளிப்படுத்துகின்றது.

79. சீஷன் காதில் முதல் நாதம் விழுமுன் தான் முன் அனுபவித்த, அதாவது சென்றுபோன குழந்தைப்பரு வத்தை அவன் திரும்பப் பெறவேண்டும்.

80. ஏகனான அந்தக் குருநாதனிடமிருந்து பிரகாசத்தின் அதாவது மங்காமல் ஒரே மாதிரியாயுள்ள சுவர்ணம் போன்ற ஆத்ம தேஜஸின் ஜ்வலிக்கின்ற கிரணங்கள் சீஷன் மேல் முதன் முதற்கொண்டே விழுகின்றன. இருண்ட, அடர்ந்த, கெட்டியான பிரகிருதியின் மேகம்போன்ற திரவியத்திரள்களை ஊடுருவி, நூலிழை போல, அந்த கிரணங்கள் பிரவேசிக்கின்றன.

81. அடர்ந்தகாட்டில் நெருங்கின இலைகளின் இடுவல் கள் மூலமாய் இங்கும் அங்குமாய் சூரியப் பிரகாசம் பூமி யின்மேல் விழுமாறுபோல, இந்த ஆத்ம தேஜஸின் கிரணங்கள் இங்குமங்குமாகப் பிரகாசிக்கின்றன. ஆனால் சீஷனே! ஊன் அடங்கியும், மூளை குளிர்ந்தும், ஜ்வலிக் கின்ற வஜ்ரமணிபோல மனம் உறுதிப்பட்டும், நிர் மலமாகியும் இராவிடில், அந்த ஆத்மதேஜஸின் கிரணம் ஹிருதய குகையை எட்டாது. மன இளக்கம் உண்டா

காது. ஆகாய உயர்நிலையில் உன் குப்தமான நாதங்கள்* கேட்கப்படா. ஆரம்பத்தில் சிஷன் எவ்வளவு ஆத்திரப் பட்டாலும் பிரயோஜனமின்றும்.

82. அந்நாதங்களைக் கேட்குமுன், நீ (அந்த ஆத்ம தேஜஸைப்) பார்க்க இயலாது.

83. அந்த ஆத்ம தேஜஸைப் பார்க்குமுன், நீ அந்நா தங்களைக் கேட்க இயலாது. அப்படிக் கேட்டலும் பார்த்தலும் இரண்டாவது படி.

84. சிஷன் அந்தர்முகப்பட, ஊனக்கண்கள், காது, மூக்கு, நா முதலிய புலன்கள் மூடப்பெற்றாலும், சூக்ஷ்மப் பார்வையும் சூக்ஷ்மக் கேள்வியும், சூக்ஷ்மமாய் ருசித் தலும், சூக்ஷ்மமாய் முகர்தலுமான தகைமையைப் பெறு வான். அப்போது நான்கு இந்திரியங்களும் ஐந்தாவதான சூக்ஷ்ம ஸ்பரிச இந்திரியத்தில் லயமாகும். அப்போது தான் நான்காம்படியைச் சிஷன் அடைகிறவனாவான்.

85. மனோநாசம் செய்ய முயலும் சிஷனே! இந்த ஐந் தாவதான சூக்ஷ்ம ஸ்பரிச இந்திரியத்தில் லயமானவை கள், திரும்பவும் உயிர்ப்பைப் பெறாமல் அற்றுப்போக வேண்டும். †

---

* குப்தமான நாதங்களும் கானங்களும் தியான ஆரம்பத்தில், யோகியால் கேட்கப்படும். அவை அனாஹத சப்தம் எனப் பெயர் பெறும். யோக முறையில் அனாஹதம் 4-ம் சக்கரமாம்.

† இது ஆறாவதுபடி. இது குப்த சாஸ்திர முறையில், தாரணை என்பதாம். ஒவ்வொரு இந்திரியமும், தன்னிலைமையில் நாசமுற வேண்டும்.

86. வெளிவிஷயங்களை உன் மனம் நோக்காமல் இருத்தல் வேண்டும். வெளிப்பார்வை அறவேண்டும். அந்தர் முகப்படுகிறதில், வெளிவிஷயங்களின் விக்கிரகங்களாகிய மனச் சங்கற்பங்களும் போகவேண்டும். இன்றேல், ஆத்ம தேஜஸின் அனுபவகாலத்தில், அவைகளின் இருண்ட நிழல் உன் முன் எதிர்க்கும்.

87. இப்போது ஆரும் படியான தாரணை என்ற படியில் ஏறியிருக்கிறாய்.*

88. ஏழாம்படிக்குப்போவாயாகில், ஓ சீஷனே! சிரேஷ்டமான அந்த முப்பான்மை கொண்ட ஸ்வரூபத்தைப் பார்க்கமாட்டாய். அவை எல்லாவற்றையும் ஒன்றாய்த் தான் நீ இனி அறிவாய். ஏனெனில் அம்மூன்றும் நீயாக ஆகிவிட்டாய். நீயும் உன் மனமும் இவை இணை பிரியா இரட்டையர்களாம். நீ இலக்ஷியித்து நோக்கும் சுடர் (ஆத்ம தேஜஸ்) சிரசின்மேல் பிரகாசித்து எரியும். இது (ஆத்ம புத்தி மனஸ்) என்ற முப்பான்மையான ஜீவாத்மா. இவை அழிவில்லாத மகிமை யுள்ள ஆனந்தஸ்தானத்தில் வசிக்கின்றன. மாயாப் பிரபஞ்சத்தில் இவைகள் கொண்ட பெயர்கள் இந்நிலையில் அழிந்துபோகின்றன. முன்னிருந்த முச்சுடரானது இப்போது ஓரே சுடராக ஆகிவிட்டது. அச்சுடர் ஒன்றாகப் பிரகாசிக்கின்றது; சுடுகிறதில்லை. உயிருடன் ஞானியானவன் உலகில் இருக்கும்வரை ஆத்மாவின் உபாதி இதுவாம்.

---

* 1. யமம், 2. நியமம், 3. ஆஸனம், 4. பிராணாயாமம் 5. பிரத்தியாஹாரம், 6. தாரணை, 7. தியானம், 8. சமாதி, என்பவை யோகத்தின் எட்டு அங்கங்களாம்.

89. இந்நிலையை ஜயம்கொண்ட யோகியே! தியான நிலை என்பர். இது சமாதிக்கு முற்பட்டது. சமாதி புகுமுன், இதுதான் கடைசியானநிலை அல்லது படி. (இந் நிலையில் யோகியானவன் நான் என்ற பிரக்ஞையுடன் இருப்பான்; மேலான தத்துவங்களின் தொழிலை உணருவான். இன்னும் ஒருபடி ஏற, அவன் ஏழாம்படியில், சில முறைப்படி துரியத்திற்கு அப்பால், இருப்பான். தாரணை, தியானம், சமாதி, இம்மூன்றையும் சேர்த்து ஸம்யமம் என்று சொல்லுகிறதுண்டு.)

90. நீ இப்போது (ஸமாதிநிலைக்குப் போகும்போது) பரமாத்மாவின்கண் உன்னை இழந்தாய், அதுவே ஆனாய், அதாவது அத்துடன் இரண்டறக் கலந்தாய், நான் என்ற எண்ணத்தைத் துறந்தாய், எதினின்று முன் தோன்றினாயோ அதில் லயமானாய்.*

91. சிஷனே! உனது "நான்" என்பது எங்கே? "குரு" எங்கே? "சிஷன் தான்" எங்கே? பொறிநெருப்பில் விழுந்து ஒன்றுபட்டுத் தன் தனி நிலையை இழந்தது! ஜலத்துளி சமுத்திரத்தில் லயமானது! நித்தியமான கிரணம் (ஜீவாத்மா) பரமாத்மாவாக ஆகிவிட்டது! பரஞ்ஜோதிஸாக இருக்கிறது.

92. சிஷனே! இப்போது கர்த்தாவும் நீ, சாக்ஷியும் நீ,

---

* நான் என்றும் தான் என்றும் நாடினேன் நாடலும்,
நான் என்றும் தான் என்று இரண்டில்லை என்பது,
நான் என்ற ஞானம் முதல்வனே நல்கினன்,
நான் என்று நானும் நினைப்பொழிந்தேனே. —திருமந்திரம்,

பிரகாசிக்கிறவனும் நீ, பிரகாசமும் நீ, நாதத்தில் ஜோதியும் நீ, ஜோதியில் நாதமும் நீ.

93. புண்ணியனே! ஐந்து தடைகளை நீ அறிவாய், அவைகளைவென்றாய். ஆறுவதின் யஜமானனாக இருக்கிறாய். சத்தியத்தின் நாலு படிகளை அறிவாய். அவைகளை பிறருக்கு உபதேசம் செய்கிறவனாய் இருக்கிறாய்.*

அவைகளின்மேல் விழும் ஒளி உன்னிடமிருந்து வருகின்றதுதான். முன் சிஷ்யனாக இருந்தாய். இப்போது குருவாகி விட்டாய்.

94. சன்மார்க்கத்தின் நாலு முறைகளாவன:—முதல்படி:—எல்லா துக்கங்களின் அனுபவம் நீ பெற்றாயல்லவா?

95. இரண்டாப்படி:—மார அரசனின் கூட்டங்கள் ஒன்றுசேர்ந்து உன்னை வருத்த, நீ அவைகளை ஜயித்தாயல்லவா?

96. மூன்றாம்படி:—பாபத்தை முற்றும் அழித்து மூன்றாவதான உண்மையைக் கைக்கொண்டாயல்லவா?

97. நான்காம்படி:— டௌ† என்று சொல்லப்பெறும் ஞானத்துக்குக் கொண்டுபோகும் மார்க்கமாகிய நான்காவது உண்மையில் நீ புகுந்தாயல்லவா?

---

* 5 தடைகளாவன:— 1. துக்கம் இன்னதென அறிதல், 2. மனிதனின் மனநொய்மையை அறிதல், 3. ஹிம்சையான பந்தங்கள், 4. காமனைகளின் வசமாகாமல் விலகுதல், 5. ஆசைகளின் வசமாகாமல் பெயர்தல்.

நாலுபடிகள்:— 1. துக்கம், 2. சோதனைகளின் சேர்க்கை, 3. அவைகளின் நாசம், 4. நன்னெறி.

† ஞான மார்க்கம் (சீன_மொழி)

98. இப்பொழுது போதி விருக்ஷத்தின்கீழ் இளைப் பாறு. பூர்ணஞானமாம் சமாதி நிலையைப் பெற்றாய் என்று அறி. அதுவே மாசற்றகாட்சியின் நிலை.

99. இதோபார்! நீ ஜோதிஸாகிவிட்டாய்! நாதமாகி விட்டாய்! ஸ்வராஜ்யம் பெற்றாய். ஈசுவரனானாய். நீ தேடிவந்த 'நீயே' ஆனாய். நித்தியமாய், விகாரமற்றதாய், பாபரகிதமாய், எங்கும் எப்போதும் வியாபகமாய் உள்ள நாதம் நீயே! ஏழு நாதங்களும் ஒன்றான ஏக நாதமும் நீயே !*

100. மௌனவாக்கு, அதாவது மௌனம் கடந்த நாதம் முற்றும்.

ஓம் தத் ஸத்.

---

* நான் என்றும் தான் என்றும் நாடி நான்சாரவே
தான் என்று நான் என்று இரண்டிலாத்தற்பதம்
தானென்று நான் என்ற தத்துவம் நல்கலால்
தான் என்றும் நான் என்றும் சாற்றுகிலேனே—திருமந்திரம்.

இரண்டாம் பிரகரணம்.

# இரண்டு மார்க்கங்கள்.

---

101. ஓ! கருணையுள்ள குருவே! மற்ற மனிதர்களுக்கு மார்க்கத்தைக் காட்டும். அம்மார்க்கத்தில் நுழைய அதோபாரும்! கதவைத்தட்டுகின்றார்கள்! அதன்கண் பிரவேசிக்க அவித்தையால் மருண்டு, தெரியாமல் காத்திருக்கின்றார்கள்! அந்த சுகிர்தமான தர்மமுறையான கதவு திறக்கப்படுமென்று எதிர்பார்த்திருக்கின்றதைப் பாரும்.

102. சீஷர்களின் வினு:— இஷ்டப்படிக் கருணையை அளிக்கும் சுதந்தரமுடைய புண்ணியனே! அந்த ஹிருதய* மார்க்கத்தை வெளியிடமாட்டீரா? நிர்வாணம் பெறுதலுக்குரிய வழியில் உம்முடைய அடிமைகளைச் சேர்க்க மாட்டீரா?

குருவின் உரை:—

103. மார்க்கங்கள் இரண்டு; உயர் நலமுள்ள பூரணங்கள் மூன்று. ஸ்தூல சரீரத்தை ஞானவிருக்ஷமாக† மாற்றும் தகைமையுள்ள குணசம்பத்துக்கள் ஆறு.

104. அவைகளை அணுகும் திறமையுள்ளவர் யார்?

105. முதலில் அவைகளில் பிரவேசிப்பவர் யார்?

---

* பௌத்தமதத்தில், ஹிருதயமார்க்கம் என்றும், அக்ஷி (கண்) மார்க்கம் என்றும் இரண்டு மார்க்கங்கள் உண்டு. முன்னது சாக்ஷாத் கௌதமபுத்தர் நேராக உபதேசித்துள்ளது. பின்னது, அவர் கோஷ்டியைச்சார்ந்த அறிஞர்களின் விஞ்ஞானப்பயிற்சியின் காரியமாக ஏற்பட்டுள்ளது. இவைகளை ஆரியமதத்தில், யோகிகள், முறையே குகை மார்க்கம் என்றும் கைலாசமார்க்கம் என்றும் சொல்லுவார்கள்.

† மஹாத்மாவாக.

106. இவ்விரண்டு மார்க்கங்களையும் ஒருமைப்படுத்தி முதலில் கேட்கக்கூடியவர் யார்? இவை இரண்டையும் அடக்கிக்கொண்டிருக்கும் சூக்ஷ்மமான தத்துவத்தை தெரிவார் யார்? இம்முறை விஞ்ஞானப் பயிற்சியைத் தவிர்த்து, மெஞ்ஞானத்தை உபதேசிக்கின்றது. துக்கத்தின் விரிவைக் காட்டுகின்றது.

107 அந்தோ! என்ன சொல்லுவேன். எல்லாரும் ஆலயம் எனப்படும் பரமாத்மாவுடன் கூடியிருப்பினும், பரமாத்மாவுடன் ஒன்ருக இருப்பினும், அந்தோ! ஆலயத்தின் பிரயோஜனத்தை உணர்கின்ருர் இல்லையே!

108. அலையில்லா நீர்ப்பரப்பில், சந்திரபிம்பம் பிரகாசிக்கின்றதுபோல, பார்! ஆலயம் சிறிதிலும், பெரிதிலும், நுண்ணிய அணுவிலும், மஹத்திலும், பிரதிபிம்பிக்கின்றதைக்காண்! அந்தோ! ஜனங்களின் ஹிருதயத்தை அது கிட்டவில்லையே! இந்த அருள் பிரஸாதம் கிடைக்கவும், உண்மையை அறியவும், வஸ்துக்களின் நிலைமையைத்தெரிய விலைமதிக்கமுடியாத சக்தியைப் பெறவும், இப்பிரபஞ்ச வாழ்வு மித்தையென அறியவும் இடமிருக்க, அந்தோ! மிகவும் சொற்பப் பெயர்கள்தான் அதைபபயன்படுத்துகிருர்கள்.

109 சீஷன் சொல்லுவது: — ஓ! குருவே! அந்த ஞானத்தை அடைய நான் செய்யவேண்டுவது யாது?

110. ஞானமூர்த்தியே! பூர்ணம் பெற நான் செய்ய வேண்டுவது என்ன?

111. குரு சொல்லுகின்ருர்:— சீஷனே! மார்க்கங்களை விசாரி. அவைகளில் பிரவேசிக்குமுன் மாசற்ற நெஞ்சை

உடையவனாக இரு. அதின்கண் முதல் அடிவைக்குமுன், நித்தியம் இன்னது, அநித்தியம் இன்னது, என்பதை அறி. அழியக்கூடியது இன்னது, அழியாதது இன்னது, என்பதை விசாரணையால் தெரிந்துகொள். முக்கியமாக, விஞ்ஞானப் பயிற்சியினால் உண்டாகும் அறிவு இது, ஆத்ம யோகத்தினால் உண்டாகும் ஞானம் இது, அதாவது அக்ஷி மார்க்கம் இது, ஹிருதயமார்க்கம் இது, எனப் பகுத்து அறிந்து தெளிவுகொள்.

112. தவிரவும், அவித்தை என்பது காற்றில்லாத மூடின குடம்போன்றது. ஜீவனே, அதில் அடைபட்ட பக்ஷி. அதன்கண் அது கானம்பண்ண இயலாது; அதன் இறக்கையை அசைக்கமுடியாது. மௌனமாய், சோர்வுடையதாய் அது இருக்கும்; இளைத்து இறக்கும்.

113. ஆத்மயோகத்தினால் உண்டாகும் ஞானத்தால் தெளிவுபட்டு நடைபெறாத வெறுமையான விஞ்ஞானப் பயிற்சியின் அறிவைவிட, அவித்தை வசமாக இருத்தலே நலம்.

114. ஞான விதைகள் காற்றில்லாத இடத்தில் முளையாவாம். உயிர்வாழ்தலுக்கும் அநுபவம்பெறுதலுக்கும், மனத்திற்கு அகலமும் ஆழமுமான இடம் வேண்டும்; வச்சிரசத்வரான,* பௌத்தரின் உயர்நிலையை நாடிச் செல்லும் குணசம்பத்துகளும் அமையவேண்டும். மாயையான இப்பூமியின்கண் அக்குணசம்பத்துகளை நாடாதே. அம்மாயையைத் தாண்டி மேற்செல்லு. நித்தியமான விகாரமற்ற சத்தியம் என்பதை நாடு. மற்றவை

* வச்சிரம் போன்ற இயல்பு உள்ளவர். இப்பதம் உயர்நிலையிலுள்ள புத்தரை குறிக்கிறது.

யெல்லாம் வீண் மயக்கமான தோற்றமே. அவைகளை நம்பாதே.

**115.** ஏனெனில் மனம் கண்ணாடிபோன்றது. வஸ துக்களைப் பிரதிபிம்பிக்கும்போதே தூசியும் அதன்மேல் படியும். கண்ணாடியைப்போல, அதைச் சுத்தமாய் வைத் துக்கொள்ளவேண்டும். ஆத்மஞானத்தின் இளங் காற்றைக்கொண்டு, மருள் என்ற அந்தத் தூசியைத் துடைப்பாய். ஞானமார்க்கத்தில் பிரவேசிக்க ஆரம்பித் தவனே! உன் மனமும் ஆத்மாவும் ஒன்றுபட முயலுவாய்.

116. அவித்தையைத் தவிர். அறிவின்மையை விலக்கு. அவ்விதமே, பிரமையை ஒழி. உலகமயக்கத் தினின்று, உன் கண்ணைப் பெயர்த்திடு. உன் இந் திரியங்களை நம்பாதே அவை வஞ்சகமுள்ளவைகள். இந்திரியங்களுக்கு இருப்பிடமான உன் சரீரத்தில் அகங் காரமற்ற நிலையில் நித்தியமான புருஷனைத் தேடு. அந்த லக்ஷியத்தைக்கண்டு, அந்தர்முகப்படு. நீ புத்தன் ஆகிருய். மெய்யுணர்வு பெறுகிறுய்.

117 பிறர் ஸ்துதியைத் தவிர். பக்தனே! ஸ்துதி உன்னை வஞ்சித்து மயக்கத்துக்குள்ளாக்கிவிடும். நீ என் பது உன் சரீரமன்று. நீ என்பது தன்னில் தானே சரீர மின்றி நிற்பவன். புகழும் நிந்தனையும் அதைப் பற்ரு: அவை அணுகா.

118. ஓ! சிஷனே! தற்புகழ்ச்சி என்பது உயர்ந்த கோபுரம் போன்றது. அதன்மேல் மமதையுள்ள அறி விலன் ஏறுவான், கருவத்தால் மயக்கம் கொண்டவனுய், தனிமைடாய் இருப்பான். பிறர் பார்வையில் படாமல்

தன்னைத்தான் பார்த்துக்கொண்டு செருக்குடன் ஏகாங்கியாக இருப்பான்.

119. பொய்யான படிப்பை அறிஞர் தவிர்ப்பார். நலமுள்ள தர்மமுறையை அறியின், அப்படிப்புச் சிதறும். அத்தர்மமுறையின் சக்கரம் எல்லாருக்கும் ஒரே மாதிரியாகச் சுழலும் ஏழை என்றும், பலிஷ்டன் என்றும் அதற்கு இல்லை. அக்ஷி மார்க்கம் சாதாரணமான பெருங் கூட்டத்திற்கு ஏற்பட்டது. ஹிருதயமார்க்கம், குறிப்பிட்ட சிலருக்கு மாத்திரம் ஏற்பட்டது. முன்னவன் கருவத்தினால் "இதோ பார்! நான் அறிகிறேன்" என்பான். பண்பும் பணிவுமுள்ள வழியில் பயின்று உண்மையை அறிந்த சீலனானபின்னவன் "இவ்விதம் நான் கேட்டிருக்கிறேன்" என்பான்.

120. சீஷனே! ஹிருதயமார்க்கத்திற்குப் பதரைத் தவிர்த்து மணியைக் கொள்ளும் பெரிய சல்லடை என்று பெயருண்டு.

121. நலமுள்ள தர்மமுறையான சக்கரத்தின் கதி விரைவானது. இராப்பகலின்றி ஓய்வில்லாமல் அச்சக்கரம் அரைத்துக்கொண்டே இருக்கும். சுவர்ணமணி போன்ற தானியத்தினின்று பதரைப் பிரித்து மாவாக்கும கர்மவிதியானது, இச்சக்கரத்தை நடத்தும் அதன் சுழற்சி, அக்கர்மவிதியின் போக்கைக் குறிப்பிடும்.

122. உண்மையான ஞானம் அச்சக்கரத்தின் சுழற்சியினால் உண்டாகும் மாவு. பொய்யான ஞானம் அதன் பதராம். மெஞ்ஞானம் என்ற பணியாரத்தை உண்ண விரும்பினால், நித்தியத்துவம் என்ற தெளிந்த ஜலத்தைவிட்டுப்

அந்தமாவைப் பிசைந்து, அப்பணியாரத்தைச் செய்து உண்ணலாம். மாயையின் பனிஜலத்தால் பதரைப் பிசைந்தால் ஏற்படும் பணியாரம், ஜனன மரண துக்கங்களை உண்டுபண்ணும் பக்ஷிகளுக்கு உணவாம்.

**123.** அர்ஹருடைய* உயர்நலம் அமைந்தநிலைமை பெறுதற்கு எல்லாப் பிராணிகளின் மேலும் அன்பு பாராட்டாமல் அன்பை விலக்கவேண்டுமென்று சொன்னால் அது பொய் என்று கூறு.

**124.** மோக்ஷம் பெறுதலுக்கு, உன் தாயாரைப் பகைக்கவேண்டுமென்றாலும், உன் மைந்தனை அனாதரவு செய்யவேண்டுமென்றாலும், உன் பிதாவை வெறுக்கவேண்டுமென்றாலும், அவரை நிந்திக்கவேண்டுமென்றாலும், மனிதன்மேலும் ஏனைய பிராணிகளின்மேலும் இரக்கமும் ஜீவகாருண்ணியமும் வைக்கவேண்டாமென்றாலும், அவ்விதம் சொல்லுகிற நாவானது வஞ்சனையுள்ள பொய்யான நாவெனக் கூறுவாய்.

**125.** தீர்த்தங்களையும் க்ஷேத்திரங்களையும் நாடி அலையும் வேஷதாரிகள் இவ்விதம் பிதற்றுவார்கள்.

**126.** கர்மத்தால் பாபம் உண்டாகும், கர்மமின்மையால் சுகிர்தம் உண்டாகும் எனவும் ஒருவர் உபதேசித்தால், அது தவறு என அவரிடம் சொல்லு. மனித கர்மத்தின் நிலைவறமின்மையும், பாபம், தீயவை இவைகளைத் தவிர்த்து அதன் மூலமாய் மனம் அடிமைத்தனத்தினின்று நிவிர்த்திபெறலும் தெய்வத்தன்மை பெற்ற

---

* அர்ஹர் என்பவர் புத்தர் நிலைக்குமுன் உள்ள ஓர் உயர்நிலை பெற்றவர்.

'ஜீவாத்மாவைப்' பற்றியவை அல்ல. ''ஹிருதய உபதேசம்'' இவ்விதம் நிகழ்கின்றது.

127. அக்ஷி உபதேசம் என்பது அநித்தியமான வெளிப் பிரபஞ்சத்தைப் பற்றியது.

128. ஹிருதய உபதேசம் என்பது போத நிலையைப் பற்றியது. அதுவே நித்தியமானது, ஸ்திரமானது.

129. திரியும் எண்ணெய்யும் சுத்தமாக இருந்தால் விளக்கு பிரகாசமாக எரியும். அவைகளைச் சுத்தம் செய்வதற்கு, சுத்தம் செய்கிறவன் வேண்டும். ஜ்வாலையானது சுத்தம் செய்தல் என்ற தொழிலை அறியாது. ''மரத்தின் கிளைகளும் போத்துக்களும் காற்றால் அசையும், அடி மரம் அசையாது.''

130. அவ்விதமே, கர்மமும் கர்மமின்மையும், உன்னிடம் அமைவுறும். உன் சரீரம் சலித்தாலும் மனம் சாந்தமாய் இருத்தற்பாலது. மலையின்கண்ணுள்ள ஏரி போல உன் ஆத்மா ஓய்ந்து சுகமான நிலையில் நிற்பதாகும்.

131. ''காலவட்டத்தில்*'' முயலக்கருதும் யோகியாக ஆகவேண்டுமாயின் ஓ! சீஷனே!

132. இருண்ட கானகத்திற்சென்று ஜனங்களின்றி, கர்வமான ஏகாந்தம் கொள்ளுதலினாலன்று என நம்பு; கந்த மூலங்களை உண்ணுவதாலன்று என நினை; பெரும் இமயமலைச் சாரலில் படிந்திருக்கும் பனிக்கட்டி கொண்டு, தாகம் தீர்த்தலினாலன்று என மதி. பக்தனே!

---

* காலவட்டம் — காலகதிக்குள் உலக க்ஷேமத்திற்காகத் தங்கி உழைக்கும் நோக்கத்தைக்கொண்ட சீஷனைப்பற்றி கூறப்பட்டது.

இவைகள் முடிவான மோக்ஷம் என்ற எல்லையில் உன்னைச் சேர்ப்பிக்கும் என எண்ணாதே.

133. காயக்கிலேசம் பண்ணி எலும்பு சதைகளை வருத்தப்படுத்தினால் மௌனமான ஆத்மாவுடன் ஐக்கியம் பெறலாமென்று நினையாதே. உன் ஸ்தூல சரீரத்தின் பாபங்களை ஜயித்ததினால், நிழலை* நம்பி மோசம்போகின்றவனே! பிரபஞ்சதர்மம் ஸம்பந்தமாகவும், மனிதன் ஸம்பந்தமாகவுமுள்ள உத்தரவாதங்களைச் செய்து முடித்தேன் என்றும், முற்றும் ஜயித்தேன் என்றும் எண்ணற்க.

134. பூர்ணம்பெற்ற ஞானிகள் அவ்விதம் செய்யார். அவ்விதம் செய்தலை நிந்திப்பார். தர்மஸிம்ஹமானவரும், கருணாநிதியுமான புத்தர் மனிதனது துக்கத்தின் உண்மையான காரணத்தை அறிந்தவராய், காடுகளில் சுயநலம் கருதி மனதுக்கு இன்பத்தையும் ஒழிவையும் நாடாமல் அவர் காட்டை விட்டு, நாட்டை நாடி ஜனங்களுடைய ஞான குருவாக ஆனார். அவர் நிர்வாணம் பெற்றமேல், மலையிலும், நாட்டிலும், நகரிலும் தேவர்களுக்கும், மனிதர்களுக்கும் ஞான உபதேசமும் உபந்நியாஸமும் செய்து வந்தார்.

135. அதனால், ஜீவராசிகளுக்கு அன்புள்ள கைங்கரியங்களைச் செய்து அவைகளின் பலனை அநுபவி. கருணைபற்றிய கர்மம் செய்யவேண்டியிருக்க, நீ உபேக்ஷையாக அதைச் செய்யாவிடில், நீ அதனால் கொடிய மஹாபாதகங்களைச் செய்தவனாவாய்.

---

* ஸ்தூல சரீரம்.

இவ்விதம் ஞானிகள் கூறுகிறார்கள்.

136. யாதொரு கர்மமும் இன்றி உன் ஆத்மா இருக்க வேண்டுமா? அப்படியானால் சுதந்தரம்பெறல் இயலாது. நிர்வாண பதம் அடையவேண்டுமானால், தன்னைத்தான் அறிதல் வேண்டும். அது (தன்னை அறிதல்) அன்புள்ள நற்காரியங்களினால் ஏற்படும்.

137. உபாஸகனே, ஜயம் அடைய அவா இல்லாதவன் போலும், அபஜயம் அடைய பயப்படாதவன்போலும், பொறுமையாக இரு. நித்தியமானதும் தேசகாலங்களை கடந்ததுமான எல்லையற்ற தெரிதற்கரிய வஸ்துவாகிய நக்ஷத்திரத்தின் ஒரு கிரணமாக* நீ இருக்கிறாய். உன் மனத்தை அந் நக்ஷத்திரத்தின்மேல் லக்ஷியம் வை.

138. அழியாமல் என்றும் வாழ்பவன்போல் முயற்சி கொள். உன் நிழல்போன்ற சரீரங்கள் தோன்று கின்றன, அழிகின்றன. உன்னிடத்தில் பிரக்ஞை என்று சொல்லப்படுவது அநித்தியமன்று. எப்பொழுதும் உள் ளது, அதுவே அறிவாகும். அதுவே அறியும். அவன் தான் புருஷன். முன் இருந்தான், இப்போது இருக்கிறான், இனிமேல் இருப்பான். அவன் என்றும் உள்ளவன். அவன் காலத்தைத் தாண்டியவன்.

139. இனிமையான சாந்தமும் சமாதானமும் பெற விரும்புவாயாகில், ஓ! சீஷனே! நற்காரியங்கள் என்ற

---

*ஒவ்வொரு ஜீவாத்மாவும் ஒவ்வொரு பிரஹ்மாண்டத்தின் ஈசு வரனின் ஓர் ஓர் பொறி. இது குப்தசாஸ்திரத்தின் துணிபாம். முண்டக உபநிஷத்தின் 2-ம் முண்டகம் 1-ம் காண்டம் 1-ம் மந்திரம் பார்க்க.

விதையை இனி நீ அறுக்கப்போகும் வயல்களில் விதைக்க வேண்டும். அதற்காக ஜனனம் என்ற துக்கத்தை அனுபவிக்கவேண்டும்.

140. மற்றவர்களுக்கு இடம் கொடுக்கும்பொருட்டு வெயிலினின்று நிழலுக்குப்போ. துக்கமும் துயரமுமுள்ள வெறும் பொட்டலை (ஸம்ஸாரத்தை) தண்ணீர்ப் பெருக்கால் பாய்ச்சு, அது வினைப்பயன் என்ற புஷ்பங்களையும், பழங்களையும் தரும். மனிதனின் வாழ்க்கை என்ற சூளையினின்றும் அதன்கண் உண்டாகும் கறுத்த புகையினின்றும், குப், குப் என்று ஜ்வாலைகள் எழும்பும். அஜ்ஜ்வாலைகள் சுத்தம்பெற்று உயர எழும்பி, கர்மகதியின் விதிமுறையின் முடிவில் சந்மார்க்கத்திற்குரிய மூன்று திவ்விய கம்பீரமான ஆடைகளை உண்டுபண்ணும்.

141. அந்த மூன்று ஆடைகளாவன:— நிர்மாண காயம், சம்போக காயம், தர்ம காயம். இவை உயர்நலம் அமைந்தவை.

142. தீக்ஷாக்கிரமத்தில் ஓர் ஆடையுண்டு. அது சம்ஞ்ஞா ஆடை * எனப் பெயர்பெறும். அதுவும் நித்திய மான தேஜஸைத் தரும். ஆனால் அந்த தீக்ஷை பெற்றால் நிர்வாணம் அடைந்து பிரபஞ்சப் பற்றுக்கள் மட்டும் அறுபடும், பிறப்பு நீங்கும். ஆனால் சீஷனே, ஜீவகா

* சம்ஞ்ஞா ஆடை நிர்வாணகாயம், தர்மகாயம், சம்போககாயம் என்ற நிலைகளுக்கு கீழ் உள்ளது. அந்த நிலையில் கர்மபந்தமற்று நீடுழிகாலம் சூக்ஷ்ம உலகங்களில் தங்கலாம்.

ருண்யத்தையும் கூடத் தொலைக்கும் தர்ம காயம்* என்ற ஆடையைப் பூர்ணர்களான புத்தர்கள் அணிவாராகில் அதன் பிறகு மனிதர்களுக்கு உதவி புரியமாட்டார்கள். மனித சம்பந்தம் அவர்களுக்கு இனி இன்றும். அந்தோ! சுயநலம் தேடி இவ்விதம் ஜீவகோடிகளைப் பரிதபிக்க விடலாமோ? தனித்தனியாக அவன் அவன் சுகிர்தத்தை நாடி, மனித சமூகத்தை நிர்க்கதியாக விடல் கூடுமோ?

143. சிஷனே! அந்த மார்க்கம் யாரும் அநுஷ்டிக்கலாம். அது பிரஸித்தமான வெளிப்படை மார்க்கம். அது சுயலாபமுள்ளது. ஆனால் அது பிறர் நலம் பயக்காது. காருண்ணிய மூர்த்திகளான புத்தர்களாகவேண்டுவோர் குப்தமான உயர்ந்த ஹிருதயமார்க்கத்தை நோக்கினவர்களாய் அந்த தர்மகாய நிலைமையைத் தவிர்ப்பார்.

144. இந்த ஹிருதயமார்க்கத்தில், முதல்படி. பிறர்நலம் பயக்குப்படி வாழ்தலாம். கம்பீரமான 6 நற்சீலங்களை அப்பியசித்தல் இரண்டாம்படி.

145. நிர்மாண காயம் என்ற தூய்மையான ஆடை அணிகிறவர், தமக்கு மாத்திரம் நித்திய சுகிர்தத்தைக் கருதாமல், பொதுஜன நலத்தை நாடுபவராவர்; நிர்வாணம் என்ற ஆநந்த பதத்தை அணுகியும், அது நமக்கு வேண்டாம், உலகத்திற்குப் பாடுபடுவோம், ஜனஸமூகத்தின் நலத்தை நாடுவோம், என்று நினைந்தும், தம்மின் மெலியாரை நோக்கியும் அந்த உயர்வற உயர்நலத்தைத் தியா

* தர்மகாயம் சம்போக காயம் நிர்மாணகாயம் என்பவைகளைப் பற்றிய விவரணம் பின் வரும் 306-வது உபதேசத்தைப்பற்றிய அடிக்குறிப்புகளில் காண்க.

கம் செய்வார். தியாக முறையில் இதுவே உயர்வற உயர்நலம் அமைந்த தியாகமாம்.

146 சீஷனே! பூர்ணம்பெற விரும்பும் புத்தர்கள் அநுஷ்டிக்கும் குப்தமான மார்க்கம் இதுவே! பிறர் நலம் அடையவே தம்மைத் தியாகம் செய்கின்றனர்கள்.

147. இந்த ''ஹிருதய மார்க்கம்'' உன் தகைமைக்கு மேற்பட்டதாக இருக்குமாகில், நீயே பிறர் உதவியை நாடுவாயாகில், பிறருக்கு உதவி புரியப் பயப்படுவாயாகில், நொய்மையான கோழை நெஞ்சையுடையானே! உரியகாலத்தில் எச்சரிக்கை கொள். 'அக்ஷிமார்க்கமான' (வெளிப்படையான) சாதாரணமார்க்கத்திலேயே இரு. அத்துடன் திருப்தி கொள் அந்த ''குப்த மார்க்கம்'' பின் ஒருகால் உனக்குக் கிடைக்குமென நம்பிக்கை கொள். அதை 'இன்று' நீ அடைய முடியாமற் போனாலும், 'நாளைக்கு' அதை அடையலாம். அதாவது இந்த ஜன்மத்தில் இல்லாவிடினும் வேறு ஒரு ஜன்மத்தில் நீ அடையக்கூடுமன்றோ? எம்முயற்சியும் வீண்போகாது. முயற்சி எவ்வளவு அற்பமாயினும், அதற்கும் பலன் உண்டு. அம்முயற்சி, நன்னெறி பற்றியதாக இருப்பினும் தீயநெறி பற்றியதாக இருப்பினும் சரி, கர்ம விதி மாறாது. பயனற்ற புகையும்கூட தடம் போடாமல் மறைகின்றதில்லை. "முன் ஒரு ஜன்மத்தில் நாவினாற் சொன்ன கொடிய சொல் அழிகிறதில்லை. திரும்பவும் வரும்''*. அவரை போட்டால் துவரை காய்க்குமா? மிளகுக்கொடி நட்டால், ரோஜாப்புஷ்பம் புஷ்பிக்குமா? இனிய மல்லிகைச்செடி முட்செடியாக மாறுமா?

* பிரசங்க சித்தாந்தத்தின் வசனங்கள்.

148. 'நாளைக்குப்' பலன் அறுப்பதற்கு 'இன்றே' வித்துஇடல் வேண்டும். "மஹா யாத்திரை" (ஜீவன், ஒரு மங்வந்தரத்தில் சுழலும் காலம்) யில் ஒவ்வொரு நிமிஷமும் நாம் விதைக்கும் வினைகள், அவைகளுக்குரிய பயன்களைப் பின் விளைவிக்கும். இந்தப் பிரபஞ்ச விதி எஞ்ஞான்றும் தவறாது. அவர் அவர் முன் ஜன்மாந்தரங்களில் உண்டு பண்ணிய நற்கர்மங்கள், தீயகர்மங்கள், நற்சங்கற்பங்கள், தீய சங்கற்பங்கள் இவைகளுக்குத் தக்கவாறு, சுகவாழ்வு துக்கவாழ்வு, இனிவரும் ஜன்மங்களில் யாதொரு தவறின்றி ஏற்படுகின்றன.

149. பொறுமையுள்ள மனத்துடையானே! உனக்குரிய ஊழ்வினைப்பயனை முற்றிலும் அநுபவிப்பாய். முன் என்ன என்ன கொடுத்து வைத்தாயோ, அதைப் பெறுவாய். மனச் சந்துஷ்டியுள்ளவனாக இரு. விதியின் பயனே பயன் எனத் திருப்தி கொள். உனக்கும் உன்னுடன் பிறந்தவர்களுக்கும் ஏற்பட்ட கர்மகதி இது. முன் செய்த வினைப்பயனாய், சுகிப்பார்கள், துக்கிப்பார்கள். பிறப்பு இறப்பு என்ற ஸம்ஸார சக்கரத்தின் சுழற்சி கதி இதுவே. அது உன் முன் வினைப்பயனோடு இணைக்கப் பட்டுள்ளது.

150. நீ அவர்களுக்காக 'இன்று' ஒரு வினை செய். அவர்கள் உனக்கு 'நாளை' வேலை செய்வார்கள்.

151 தன்னைத் துறத்தல் என்ற மொட்டுப் பூவினின்றுதான், முடிவில் மோக்ஷம் என்ற இனிய கனிபழுக்கும்.

152. மாறனல் மதிமயங்கிப் பயம்கொண்டு பிறர்க்கு உதவி புரியாமல் இருப்பவன் கெடுவான். தன்னை மட்டும்

ஓம்பினவன் பட்டுப்போவான். ஓடும் ஜலத்தைக்கொண்டு தன் களைப்பைத் தீர்க்க விரும்புவான் ஓடையில் இறங்க பயந்தால், தாபத்தால் வருத்த முறுவான் அன்றோ? தனக்கு என்ன வருமோ என நினைந்து, பயத்தால் ஒரு கர்மமும் செய்யாது இருத்தல் பாபத்திற்கு வித்தாம்.

153. சுய லாபம் கருதி வேலை செய்யும் பக்திமானுடைய வாழ்நாள் வீணே! விதித்த கர்மத்தைச் செய்யாதவன் வாழ்நாள் வீண்.

154. உன் வாழ்நாளது கதியின் தர்மத்தை அனுசரித்து நட. உன் ஜாதியார், உன் சுற்றத்தார், உன் நட்பினர், உன்பகைவர் இவர்கள் சம்பந்தப்பட்ட கடமைகளையும் உத்திரவாதங்களையும் கொண்டு செலுத்து. உன்னுடைய சுக துக்கங்களைப் பாராட்டாதே. அவைகளின் மேல் பராமுகமாக இரு. வினைப்பயனை முடிவுசெய். இனிவரும் ஜன்மத்திற்குப் பயன் படும்படி சித்திகளை அடை.

155. சூரியனாக நீ இருக்க இயலாவிடினும், ஒரு தணிந்த கிரகமாக இருத்தற்பாலதன்றோ? மேலும், சீஷனே! என்றும் பரிசுத்தமான ஹிமாசலத்தின் சிகரத்தின் மேல் மத்தியானத்தில் சூரியனைப்போல ஜ்வலிக்கும் திறமை உனக்கு இல்லாவிடினும், உனக்குத் தகுதியான வேறொரு நெறி இல்லையா? அதை நாடு.

156 இருட்டில் நடக்கின்ற யாத்திரைக்காரருக்கு அந்தி நக்ஷத்திரம் வழி காட்டுமாறு போல நீயும் உன்னால் இயன்றவரை கூட்டத்தில் வழி தப்பினவர்க்கு வழி காட்டுவாய்.

157. இதோ பார்! சிவப்பு மூட்டம்பெற்ற அங்காரகன் என்ற கிரகம், நித்திரை கொள்ளும் பூமியைத் தன் கண்ணால் கடாக்ஷிக்கிறான். இதோ பார்! புதன் என்ற கிரகத்தின் அக்கினி மயமான சூக்ஷ்மக் கையானது துறவிகளை அன்புடன் காப்பாற்றும் முறையில் எட்டுகின்றது. சூரியன் இல்லாத காலத்தில், அவர் வேலைக்காரர்களாக இவ்விரு கிரகங்களும் இரவில் மௌனமாக காக்கின்றன. ஆயினும், இவை இரண்டும், முன் கல்பங்களின் இரண்டு சூரியர்களாகப் பிரகாசித்தன. இனி வருங் கல்பங்களில், அவ்விதமே, திரும்பவும் இரு சூரியர்களாக பிரகாசிக்கக் கூடும். இவ்விதமாகத்தான் கர்மகதியின் தர்மம் நிகழ்கிறது. அதன் ஏற்றமும் தாழ்வும் உலக இயல்பு.

158. ஓ! சீஷனே! அவைபோல நீயும் ஒழுகுவாய். கஷ்டப்பட்டு கால் கடுக்க நடக்கிற பிரயாணிக்கு, அவைபோல் நீயும் பிரகாசம் கொடு. உன்னைவிட மெலியானைத் தேடிப்பார். துக்கத்தில் மூழ்கி, மருளால் மயங்கி, புத்திகெட்டு, பசியைப்போக்கும் ஞான உணவு இல்லாமல் அவன் தவிப்பான். ஆறுதலும் தேறுதலும், நன்னம்பிக்கையும் உண்டாகும்படி உபதேசிக்கக்கூடிய குரு இல்லாமல் தயங்கி நிற்பான். அத் தன்மையனை நாடி அவனுக்கு தர்மத்தை உபதேசம் செய்.

159. சீஷனே! பின் வருமாறு அவனுக்கு உபதேசம் செய்—"செருக்கைத் தவிர்த்து அகந்தையைத் துறந்து அவைகள் இரண்டையும், பக்திக்கு அடிமைகளாக்கி, தன் உயிரிடம் அபிமானமிருப்பினும், புத்தரின் பாதத்தில் பொறுமையையும் தர்மத்தில் பணிவையும்

அழகிய மலராக ஒருவன் வைப்பானுகில், இந்த ஜன்மத்தி லேயே சுரோத்தாபத்தியாவான்* பூர்ணம் பெற்றவர்பால் ஏற்படும் சித்திகள் சமீபத்தில் இரா. வெகு தூர மாக உள்ளன. ஆயினும், முதல்படியில் கால் வைத்து விட்டான். ஞான நெறியான ஓடையில் இறங்கியிருக் கிருன். மலைச் சாரலில் வசிக்கும் கழுகின் சூக்ஷ்மமான கண்பார்வையும், சாதுவான மானின் சூக்ஷ்மமான சுரோத்திரேந்திரிய சக்தியும் அவனுக்கு ஏற்படும்.

160. சிஷனே! உண்மையான பக்தியானது, முன் ஜன்மாந்தரங்களில் சம்பாதித்த அறிவைத் திரும்பவும் தந்து அருளும் என்றும் அவனுக்கு உபதேசம் செய். திவ்வியசக்ஷுஸும், திவ்விய சுரோத்திரமும் ஒரு குறு கிய ஜன்மத்தில் அடையப்பாலதன்று.

161. ஞானம்பெற விரும்பினுல், பணிவுள்ளவனுக இரு.

162. ஞானியாகிவிட்டால், மேலும் அதிகப் பணி வுள்ளவனுக நட.

163. எல்லா நதிகளையும், ஓடைகளையும் தன்னுள் அடங்கப்பெறும் ஸமுத்திரம் போல நீ ஒழுகு. கம்பீர மான ஸமுத்திரத்தின் சலனமற்ற சாந்த நிலையைப் பார். எத்தனை நதிகள் வந்து சேர்ந்தாலும் அவைகளை அது உணராது.

164. உன் கீழ் மனதை மேல் மனதின் தெய்வ சுபா வத்தால் அடக்கு.

---

* சுரோத்தாபத்தி; — இதன் விவரணம் மூன்றும் பிரகரணம் எண் – 201 அடிக்குறியில் காண்க.

165. நித்தியமான ஆத்ம பலத்தால், அந்த தெய்வ சுபாவத்தையும் அடக்கி ஆளு.

166. ஆசையை அறுக்கிறவனே பெரியவன்.

167. ஆசையின் வாசனையையும் ஆத்ம பலத்தால் அறுக்கிறவன் அவனிலும் பெரியவன்.

168. கீழானது மேலானதைக் கெடுக்காமல் எச்சரிக்கையாக இரு.

169. முடிவில் உண்டாகும் சுதந்திரத்தைப் பெற வழி உன்னிடமே உள்ளது.

170. அந்த வழியானது உனக்குப் புறம்பாக ஆரம்பித்து உனக்குப் புறம்பாக முற்றுப் பெறுகின்றது.

171. நதிகளுக்கெல்லாம் தாயாக தீர்த்த யாத்திரைக்காரர்களால் ஆடம்பரமாய்ப் புகழப் பெறும் நதியானது அதன் உற்பத்திஸ்தானத்தில் மனிதர்களால் புகழப்படாமல் தாழ்மையாக இருக்கும். அதுபோல மூடர்கள் முன், அமிர்த ஜலங்களால் நிரம்பிய ஞானிகள், ஒன்றுமில்லாத வெறுமையான மனித சரீரங்களாக மாத்திரம் காணப்படுவர்.* எனினும், புண்ணிய நதிகளின் உற்பத்தி இடம் புண்ணிய தேசமாம். அவ்வாறே ஞானிகள் எல்லோராலும் பூஜிக்கப்படுவார்.

---

* அவஜா நந்தி மாம்மூடா
மாநுஷீந்தநு மாஸ்ரிதம்,
பரம்பாவ மஜாநந்தோ
மமபூதமஹேஸ்வரம்.

—பகவத்கீதை ix-11.

172 அருகர்களும் அனந்த சக்ஷுஸ்பெற்ற ஞானிகளும் உதம்பரமரத்துப்* புஷ்பம்போல அருமையானவர்கள். நிசிராத்திரி வேளையில் ஒன்பது, ஏழு தாள்கள் உள்ள திவ்விய செடியுடனும், அசுத்தமான மனிதர் கால் தடத்தால் அசுத்தமாகாத அதிதாவள்யமான பனிக்கட்டிகள் உறைந்துள்ள மலை உச்சிகளில் இருட்டில் புஷ்பிக்கும் திவ்விய தாமரை மலருடனும் அருகர்கள் பிறப்பார்கள்.

173. முடிவான மோக்ஷ இச்சை முதல் முதல் உண்டாகும் ஜன்மத்திலேயே ஒருவன் அருகன் ஆதல் முடியாது. (அருகன் என்றால் பூர்ணம் பெற்ற ஞானி). ஓ! சிஷனே! ஞான முறையில் அவாவுள்ளவனே! நித்தியனான ஆன்மாவுக்கும், அநித்தியமான சரீரங்களுக்கும் நடக்கும் மும்முரமான போரில் வலியத் தலையிடுகிற தீரன் அந்தப் போரின் வழியிற் பிரவேசிக்கத் தடுக்கப்படான். பிரவேசியாமல் விடான்.

174. அவன் அப்போரில் ஜயிப்பான். அல்லது அதில் மரணமடைவான்.

175. ஜயிப்பானுகில், கிடைப்பது நிர்வாண பதம். துன்பத்திற்கும் வரம்பில்லா துக்கத்திற்கும் காரணமான மரணதர்மம் பற்றிய நிழல் என்று சொல்லப்பெறும் ஸ்தூல சரீரத்தைக் கழற்றி எறியுமுன், ஜனங்கள் அவனைப் பரிசுத்தமான புத்தன் என மதித்துப்போற்றிப் புகழுவார்கள்.

---

* அத்திமரம்

176. அப்போரில் வீழ்ந்து மடிவானுகில், அதனாலும் அவன் காரியம் வீண்போகவில்லை. இந்த ஜன்மத்தில் ஏற்படும் போரில் அநேக பகைகளை வென்று கொன்றிருப்பான் அன்ருே? அவர்கள் இனிவரும் ஜன்மத்தில் அவனைத்திரும்ப எதிர்க்க மாட்டார்கள்.

177. நிர்வாண பதத்தை அடைந்தாலும், அல்லது அது கிடைத்து நீ அதைவேண்டாமெனத் துறந்தாலும், தீரனே! கர்மா கர்மபலனை நோக்காதே.

178. புத்தராக வேண்டியவர், நிர்வாண பதம் என்ற மோக்ஷபதத்தைத் துறந்து, துக்கம் நிறைந்த 'குப்தவாழ்வை' அடைகின்ருர். அத்தன்மையால், பல்லூழிகாலம் துன்பம் பெற விரும்புகின்ற சீஷனே! அத்தகையர் மும்முறை பூஜிக்கப்படுகின்ருர் என அறி!

179. மார்க்கம் ஒன்றே. சீஷனே! அது முடிவில் இரண்டு உட்பிரிவுகளை உடையது. அதற்குரிய படிகள் நான்கும்* ஏழும் உள்ள வாயில்கள்† கொண்டன. அந்த இரண்டு உட்பிரிவுகளில் ஒன்றின் முடிவில் உடனே ஆனந்தப் பிராப்தியாம். மற்றதின் முடிவில் தாமதத்தில் ஆனந்தப் பிராப்தியாம். இரண்டும் புண்ணிய ஒழுக்கமுறையின் பலனும். இவைகளில், ஒன்றைத் தெரிந்து எடுத்தல் உன் பிரியத்தைப் பொருத்தது.

180. ஒன்றேதான், பகிரங்கமானது குப்தமானது என்ற இரண்டு முடிவுகளை உடையது. ** முன்னது

---

*படிகள்–தீக்ஷைகள் (Initiations)

†வாயில்கள் – (Portals) பின்வரும் மூன்ரும் பிரகரணத்தைப் பார்க்க.

**முன்னதை யாரும் அறியலாம். பின்னது தீக்ஷாக்கிரம முறையில் உபதேசிக்கப்படும்.

லக்ஷியத்தில் கொண்டுசேர்க்கும்; பின்னதில், தன்னையே தியாகம் செய்தலாகும்.

181. ஸ்திரமில்லாததை ஸ்திரமானதற்கு தியாகம் செய்திடில், நீ அடைதல் உயர்ந்த பேறும். ஜலத்துளி அது வந்த இடம் திரும்பும். பகிரங்கமான வழி மாறுத நிலையான நிர்வாண பதத்தில் சேர்ப்பிக்கும். அது மகிமை கொண்ட குறைவில்லா நிறைவு; "மாற்றம் மனம் கழிய" நின்ற ஆனந்த நிலை.

182. ஆகவே, முதல் வழி மோக்ஷம் தரும்.

183 இரண்டாம் வழி தியாக நெறி, அதனுல் துயர முள்ள நெறிமுறை எனப் பெயர் பெறும்.

184 இந்த குப்த நெறியில் அருகன் சொல்ல ஒண்ணுத துயரத்துக்கு ஆளாவான். அத்துயரமாவது யாதெனில்: உண்மையை அறியாமல் அவித்தையில் உழலும் ஜனங்களாகிய நடைப்பிணங்களைப்பற்றிய துயரமும், கர்மகதிக்கு உள்ளாகித் தீர்க்கத்தகாத துக்கம் அநுபவிப்பவர்களைப் பற்றிய துயரமுமாம். ஞானிகள்கூட கர்மகதியினுல் உண்டாகும் துக்கத்தைத் தவிர்க்க ஒண்ணுது.

185. "எல்லாக் காரணங்களையும் தவிர்க்கும்படி உபதேசம் செய்; காரணங்கள் ஏற்படின் அவைகளின் காரியமாகிய வினைப்பயனின் கதியை, பலமான சமுத்திர நீரோட்டத்தைப்போல, தடுத்தல் முடியாது. அது போகிற போக்கில் விடுதலே வேண்டும்." இவ்வித ஞான உபதேசம் புதியதன்று. முன்னரேயுள்ளது.

186. பகிரங்கமான வழியின் எல்லையை அடைந்த நிமிஷமே, போதிஸத்வ சரீரத்தை அடையும் லக்ஷியத்தை

யும் விட்டு விட்டு அதைவிட மும்முறை கம்பீரமான தர்மகாய நிலையில் புகுவாய். அந்நிலையில் புக, உலகத்தை யும் ஜனசமூகத்தையும் முற்றும் மறத்தல் ஏற்படும்.

187. அந்தரங்கம் அல்லது குப்தம் என்று சொல்லப் படும் வழியும் பரநிர்வாணம் என்ற ஆனந்த பதத்திற் சேர்ப்பிக்கும். ஆனால் எண்ணிறந்த கல்பங்களின் முடி வில் இது நேரும். நிர்வாணபதவிகள் அடிக்கடி லபிக்கும், வரும்; ஆனால் மயங்கித் தவிக்கும் மானிடர்களின் மேலுள்ள அளவு கடந்த இரக்கத்தாலும், காருண்ணியத் தாலும், அப்பதவியை அடைகிற புண்ணியர் மனப்பூர்வ மாய் அதை தியாகம் செய்திடுவார்.

188. முடிவில் பெறும் ஆனந்தமே "உயர்வற உயர்நலம் உள்ளது" எனச் சொல்லப்படுகிறது. ஸம்யக்ஸம்புத்தரான பூர்ணமான நிலையை உபதேசிக்கும் குருவானவர் பரிசுத்தமான நிர்வாண பதவியின் தலை வாயிலில் நின்று அதைத் துறந்தார். உலகத்தைக் காப் பாற்றும் பொருட்டு அவ்விதம் தன்னையே தியாகம் செய்தார்.

* * * *

189. இவ்விரு வழிகளின் உண்மைகளை இப்போது உணர்கிறாய். உயர்நிலை அடைய அவாவுள்ளானே! சன் மார்க்கத்தின் முடிவை அடைந்த பிறகு, ஏழு வாயில் களைத் தாண்டியபிறகு, இவ்விருவழிகளில் ஒன்றை நீயும் தெரிந்தெடுக்கவேண்டியவனாவாய். உன் மனம் தெளிந் திருக்கிறது. எல்லாவற்றையும் நீ அறிந்துள்ளாய்: இனிமேல் வீணான எண்ணங்களால் மதிமயங்கி மோசம் போகமாட்டாய். ஸத்தியமானது உன்முன்னர் யாதொரு

மறைப்பின்றி வெளிப்படையாகத் தோன்றுகிறது. உன்னைத் தீர்க்கமாய் உற்றுப்பார்க்கின்றது. அது உபதேசிக்கிறதாவது:—

190. **ஸ்வாத்மலாபத்தை நோக்கில், சாந்தநிலை, மோக்ஷம்,** இவைகளின் பலன் இனிமையானதுதான். ஆனால், நெடுங்காலம், வருத்தமுற்றுச்செய்யும் கடமையை நிறைவேற்றுதலினால் உண்டாகும் பலன் அதனினும் இனிமையானது. ஆம் பிறர்பொருட்டுச்செய்யும் தியாகத்தினால் உண்டாகும் பலனன்றோ இது! துக்கத்தால் வருந்தும் நம்மவர்களான மனிதரின் நலத்தைக் கருதியன்றோ இந்தத் தியாகமுறை நிகழ்கின்றது.

191. *பிரத்யேகபுத்தர் ஆகின்றவர் தன்னலத்தைக் கருதுகின்றார். ஸம்ஸாரம் என்ற யுத்தத்தில் வெற்றி பெற்று புத்தராகவேண்டிய புண்ணிய மூர்த்தி† உயர்நலமுள்ள பலன் தன் கையில் வைத்துக்கொண்டும், ஜனங்களின்மேல் தமக்குள்ள அன்பின் மிகுதியால்,

192. "பிறர்பொருட்டு இந்த உயர்நலமமைந்த பதவியை தியாகம் செய்கிறேன்." என்றார்.

193. இவ்விதம் உயர்ந்த மஹாத்தியாகத்தைச் செய்துள்ளார். அவரே உலகரக்ஷகர்.

---

*பிரத்யேக புத்தர் இதன் விவரணம் இரண்டாம் பதிப்பு முகவுரையில் காண்க.

†போதிஸத்துவர்.

194. முடிவில் ஆனந்தத்தின் எல்லையும் நீண்ட துக்கவழியும் இருக்கின்றமைகாண். வருங் கல்பங்களில் துக்கத்தையே நாடுபவனே! இவ்விரண்டினுள் ஒன்றைத் தெளிந்து தெரிந்தெடுப்பாய்.

195. "ஓம் வயிரபாணி ஹூம்."

இரண்டு மார்க்கங்கள் முற்றும்.

ஓம் தத் ஸத்.

மூன்றும் பிரகரணம்.

# ஏழு வாயில்கள்.

196. சீஷன்:— ஐயனே! இரண்டில் ஒன்றைத் தெளிந்து தெரிந்தெடுத்துக் கொண்டேன். ஞானம்பெற மிகவும் தாகமுள்ளவனாக இருக்கிறேன். குப்தவழியை மறைத்துள்ள திரையை இப்போது நீர் அகற்றிவிட்டீர். உயர்ந்த வழியாகிய மஹாயானத்தை உபதேசித்திருக்கிறீர், உம்முடைய தாஸன் நான், நீர் காட்டும் வழியைப் பின்பற்ற இதோ இங்கே சித்தமாக இருக்கிறேன்.

197. குரு:— *சிராவகனே! நலம்தான்! நீ தனிமையாய் வெகுதூரம் யாத்திரை செய்யவேண்டியவன். அதனால் அந்நிலைமைக்கேற்ப ஆயத்தம் செய்துகொள். குருவானவன் வழியை மாத்திரம் காட்டுவான். வழி யாவருக்கும் ஒன்றே. அஃது ஒரே மாதிரியானதுதான். லக்ஷியமான எல்லையை அடையும் சாதகங்கள் யாத்திரை செய்கிறவர்களைப் பொருத்து வேறுபடுகின்றன.

---

*குறிப்பு:— சிராவகன் சிரவணம் செய்பவன். சமயமுறைகளைக் கேட்பவன். அதன்மேல் அனுஷ்டானத்தில் பயிலுகிறவன் சிரவணன்.

198. ஓ! தீரனே! எதைத் தெரிந்தெடுத்துக்கொள்ளுகிருய்? **அக்ஷிமார்க்கத்தின்** நான்குபடியுள்ள* தியான முறையையா? அல்லது **போதநிலைக்கும்** ஞானத்தின் ஏழாம் படியான **பிரக்ஞை நிலைக்கும்** கொண்டுபோய்விடும் உயர் நலமுள்ள ஆறு சீலங்களாகிய **பாரமிதங்களையும்** உன்னிடம் அமையும்படி செய்யப்போகின்ருயா?†

199. நான்கு படியுள்ள **கரடுமுரடான தியான மார்க்கம்** சுற்றிச்சுற்றியுள்ளது; மலைபோன்று செங்குத்தானதும் ஏற்றமுள்ளதுமான உயர் உச்சியைப்பிடிக்கிறவன் மும்முறை (அதிக) சிரேஷ்டன்.

200. **பாரமிதங்கள்** என்ற உயர் உச்சிகளை அடையும் பாதை இன்னும் அதிக செங்குத்தானது. வஞ்சகமுள்ள கொடூரமான **சக்திவாய்ந்த** ஆசாபாசங்களால் காக்கப்பட்ட கோட்டையின் ஏழுவாயில்கள் வழியாய் பெரும் போராட்டம் செய்யவேண்டும். அதன்மேல்தான் அது சித்திக்கும்.

201. சீஷனே! தைரியங்கொள். பயம் வேண்டாம். அழகிய உயர்நலமுள்ள ஆறுதல் பயக்கும் விதியை ஞாப

---

*நான்குபடி: பிரத்தியாஹாரம், தாரணை, தியானம், ஸமாதி என்றும்.

†பின்வரும் 208 முதல் 212 வரையுள்ள வாக்குகளில் கூறப்படும் (1) தானம், (2) சீலம், (3) பொறுமை, (4) வைராக்கியம், (5) வீரியம், (6) தியானம் என்ற ஆறும், நேர்மையான சாதனம், சாஸ்திரஞானம், சிரத்தை, லக்ஷியத்தை விடாத பிடிப்பு இவை நாலும், சேர்ந்து 10 பாரமிதங்கள் எனச் சொல்லப் பெறும.

கப்படுத்திக்கொள். அதாவது:– *சுரோதாபத்தி என்னும் வாசலைத் தாண்டியவனுக்கு, அதாவது மோக்ஷமார்க்கம் என்ற ஆற்றில் பிரவேசித்தவனுக்கு, அதாவது நிர்வாண பதத்திற்குக் கொண்டுபோய்விடும் ஆற்றின் அடிப் பாகத்தை இந்த ஜன்மத்திலாவது இனிவரும் ஜன்மத்திலாவது மிதித்தவனுக்கு, ஏழு பிறப்புக்கள்தான் அதன் மேல் உள்ளன. வபிரம்போன்று, உறுதிப்பாடுள்ளவனே, உனக்கும் இனி ஏழு ஜன்மங்கள்தான் உள்ளன,

202. மேல்நோக்கிப் பார். திவ்விய ஞானத்தைப் பெற அவா உள்ளானே! உன் கண்முன் என்ன தோன்றுகிறது?

203. சிஷன் சொல்லுகிறான்:— பிரகிருதி என்ற போர்வை மூடியிருக்கின்றது. அதன் மடிப்புக்களில் அகப்பட்டு நான் போராடுகிறேன். என் தோற்றத்தில், அதன் ஆழம் மேன்மேலும் கிழ்நோக்கிப் போகின்றது. என் நாதனே! உம்முடைய கையை ஆட்டவே அந்த மருள் நீங்குகிறது, மண்டலமிட்டுள்ள ஸர்ப்பம் விரிதல் போல, ஒரு நிழல் போன்ற உருவம் சலிக்கிறது ........ "ஊருகிறது, விருத்தியடைகிறது, பெருகுகிறது இருளில் மறைகிறது".

*குறிப்பு:— ஞானமுறையில் நான்கு படிகள் உண்டு. பௌத்த மதத்தில் அவைகளைத் தாண்டியவர்களை முறையே அடியில் கண்ட வாறு கூறப்படுகிறது. 1. சுரோத்தாபத்தி, நிர்வாணம் என்னும் மஹா சமுத்திரத்திற்குப் போகும் நதியில் இறங்கியவன். 2. சகிர்தகாமின், இனிமேல் ஒரே ஜன்மம் எடுப்பவன். 3. அநாகாமின், இனி ஜனனம எடுக்காதவன். ஆனால் ஜன உபகார நிமித்தம் சுயேச்சையாக எடுக்கலாம். 4. அர்கன், ஜீவந்தகனாக இருக்குங் காலத்திலேயே நிர்வாண நிலையை அநுபவிப்பவன். அவன் ஸமாதி நிலையில் நிர்வாணத்தின் எல்லா ஆனந்தங்களையும் சாக்ஷாத்கரிப்பான். வேதாந்த ஞானமார்க்கத்தில் அவர்களை முறையே குடீசகன், பஹூதகன், ஹம்ஸன், பரமஹம்ஸன் என்று கூறப்படுகின்றது.

204. குரு:— நீ செய்த பாபங்களான இருளின்மேல் உன்னுடைய நிழல் தோன்றுகிறது. அந்நிழல் **நெறியின்** புறம்பாயுள்ளது

205. சிஷன்:— "ஆம்! நாதனே! நெறியைப்பார்க்கிறேன். கீழே அதன் அடிப்பாகம் சேற்றில் நட்டுள்ளது. அதன் உச்சி நிர்வாணம் என்ற கம்பீரமான ஜோதியில் மறைந்துள்ளது. ஞானத்திற்குப் போகும் கஷ்டமான முள்ளுள்ள பாதையில் எப்போதும் குறுகிக்கொண்டு இருக்கின்ற வாயில்களை இப்போது பார்க்கிறேன்".

206. குரு:— சிஷனே, நீ பார்க்கிறது சரிதான். அந்த வாயில்கள் வழியாய் உபாசகன் பிரகிருதி ஸமுத்திரத்தின் "அக்கரையை" அடைகிறான். அதாவது ஸம்ஸார சாகரத்தின் எல்லையைத் தாண்டுகிறான். நிர்வாண பதத்தை அடைகிறான். ஒவ்வொரு வாயிலின் கதவைத் திறக்க, ஓர் ஓர் சுவர்ணத் திறவுகோல் உண்டு. அத் திறவுகோல்களாவன:—

207. (1) தானம்—ஈகை, நித்தியமான அன்பு, இவைகள்கொண்ட திறவுகோல்.

208 (2) சீலம்—மனம், மொழி, மெய் இவைகளின் நேர்மை. காரணத்தையும் காரியத்தையும் நேர்மையாக இணங்கும்படி செய்தலும் அதனால் கர்ம மூலம் அற்றுப் போதலுமான தன்மை.

209. (3) சாந்தி— எதனாலும் சலிக்கக்கூடாதயான பொறுமை

**210.** (4) **வைராக்கியம்**—சுகத்தில் விருப்பும் துக்கத்தில் வெறுப்பும் இன்மை; மருளை நீக்கப்பெற்ற உண்மை அறிந்த நிலை.

**211.** (5) **வீரியம்**—பிரபஞ்ச சம்பந்தமான பொய்யான சேற்றினின்று தப்பிவிலகி, கம்பீரமான சத்தியத்தை நோக்கிய நெறியை அடைதலில் தளராத முயற்சியும் திறனும்.

**212.** (6) **தியானம்** — இந்த சுவர்ணக்கதவு ஒரு தடவை திறக்கப்பெற்ருல், அதன் வழியாய் மாசற்றவனை ஞானி நித்தியமான ஸத்திய பூமியை அடைகிருன். இடைவிடாமல் அதன்பால் தியானபரனுக ஆகிருன்.

**213.** (7) **பிரஞ்ஞை**—இந்தத் திறவுகோல் மனிதனைத் தேவனுக, போதிசத்வனுக, தியானிகளின் புத்திரனுக ஆக்கும் தன்மையது.

**214.** இத்தன்மையான வாயில்களுக்கு, இத்தன்மையான சுவர்ணத்திறவுகோல்களாம்.

**215.** உன் சுதந்தரத்தை உன் கைக்குள் வைத்திருக்கும் தீரனே! கடைசியான வாயிலை அணுகுமுன், அலுப்பான இந்நெறியில் இந்த ஆறும் பத்துமான பாரமிதங்கள் என்ற உயர் சிலங்களின் பூர்ணத்தை நீ அடையற்பாலது.

**216.** ஓ! சிஷனே! உன் குருவை முகத்திற்கு முகம் நேராக சந்திக்கும்படியாக நீ ஆயத்தமாகுமுன், ஜோதிக்கு

101542
Q4
N54

முன் ஜோதியாக, உன் குருவைச் சந்திக்குமுன், உனக்கு என்ன சொல்லியிருந்தது? அதை உன்னிப்பார்.

217. முகப்பில் உள்ள வாயிலை நீ அணுகுமுன் உன் மனத்தினின்று சரீரப்பற்றுக்களை அகற்ற நீ அறியவும், அவைகளின் நிழல்கூட உன் மனத்தில் விழாமல் தொலைக்கவும், நித்தியமான வஸ்துவில் நினைப்புள்ளவனாக நீ உயிர்வாழவும் வேண்டும். இந்நிலையைப்பெற, எல்லாம் உன்னிடம் ஜீவித்து, உஸ்வாஸம் நிஸ்வாஸம் செய்வது போல, நீயும் எல்லாவற்றிலும் ஜீவிக்கவும் உஸ்வாஸம் நிஸ்வாஸம் செய்யவும் வேண்டும். எல்லாவற்றிலும் உன்னையும், உன்னில் எல்லாவற்றையும் உணரவேண்டும்.

218. உன் மனத்தை இந்திரியங்கள் விளையாடும் கூடமாக விடாமல் தடுக்கவேண்டும்.

219. நான் வேறு, நீ வேறு, அது வேறு என்ற வேற்றுமை பாவத்தைத் தவிர். ஒருமை உணர்வு கொள். ஜலத்துளியில் சமுத்திரத்தையும் சமுத்திரத்தில் ஜலத்துளியையும் அமையுறும்படி செய்.

220. இவ்விதம் ஒழுகுவாயாகில், எல்லா ஜீவ பூதங்களுடன் நேர்மையாக அன்புடன் இருப்பாய். ஒரே குருவினிடம் கற்கும் சகபாடிகளைப்போலவும், ஒரே அன்பு கொண்ட தாய் வயிற்றின் புத்திரர்களைப்போலவும், எல்லா ஜனங்களையும் நினை; அவர்கள்மேல் அன்புவை.

221. குருக்கள் அநேகர் உண்டு. ஆத்மா அதாவது ஆலயம், என்ற சகல பூதங்களிலும் அந்தர்யாமியாயிருப்பது, ஒருவரே. அவரே உன் குருநாதன். நீ அக்குருநாதனின்

ஓர் கிரணமாய் இருப்பதாக மதி. அவ்விதம் அவரிடம் பிராணன் உள்ளதாக நட. உன் தோழர்கள் எவ்விதம் அந்த ஆத்மாவான குருநாதனிடம் இருக்கின்றூர்களோ, அவ்விதமே நீயும் அவர்களிடம் இருப்பதாக நினை. அவ்விதம் நடைபெறுவாய்.

222. இந்நெறியின் முகப்பான வாயிலில் நிற்குமுன், முகப்பான வாயிலைத் தாண்டுமுன், இரண்டையும் ஒன்று படுத்தல் வேண்டும். மேல்மனம் (ஜீவாத்மா) கீழ்மனம் (அசுத்தமனம்) இரண்டிற்கும் மத்தியில் உள்ள அந்தக் கரணம் என்ற பாதையை (பாலத்தை) நாசப்படுத்தல் வேண்டும். சுயலாபத்தைக் கருதும் மனத்தைத் தொலைத் தல் வேண்டும். பிறர் நலம்கருதும் சுத்தமனத்தை ஸ்திரப் படுத்தல் வேண்டும்.

223. உன் முதல் படியில், என்றும் தவருத தர்மம் என்பது உன்னைச் சில கேள்விகள் கேட்கும். அவை களுக்கு சமாதானம் சொல்ல நீ ஆயத்தமாக இருத்தல் வேண்டும். அவையாவன:—

224. "உயர்ந்த லக்ஷியத்தையும் நம்பிக்கையையு முடையானே! எல்லா விதிமுறைகளையும் அநுஷ்டித் தாயா?"

225. "ஜனஸமூகத்தின் ஸமஷ்டிமனம் ஸமஷ்டி ஹிருதயம் இவை இரண்டுடன், உன் மனம், உன் ஹிரு தயம் இசைந்து நேர்மையாக இருக்குப்படி செய்து

கொண்டிருக்கிறாயா? புண்ணிய நதியின் பேரொலி* எவ்விதமாக உலகத்தின் இயற்கையான சப்தங்களின் எதிர் ஒலியாக ஏற்படுகிறதோ, அவ்விதமே, சுரோத்தாபத்தியாக வேண்டுபவனின் மனமும் ஹிருதயமும், எல்லா ஜீவ ராசிகளின் துன்பம் துயரம் இவைகளால் உண்டாம் பெருமூச்சு தம்முடையதாக உணரும் இயல்பைக் கொள்ளவேண்டும். அவன் எந்த ஜீவராசியின் மனம் நொந்தாலும், அதைத்தன் நோவாக மதிக்கும் தன்மையை உடையவனாக ஆக வேண்டும்.

226. சீஷர்களை, மனத்திற்கு இசைந்து தொனிக்கும் வீணையின் தந்திகளுக்கு உவமிக்கலாம். ஜனஸமூகத்தை, தொனியை அபிவிர்த்திக்கும் அதன் சுரைக்குடுக்கைக்கு உவமிக்கலாம். அவ்வீணையின் தந்திகளை மீட்டும் கையை, உலக நியந்தாவான ஈசனின் உலகஸம்ரக்ஷணைக்கு ஆதாரமான இனியநாதத்திற்கு ஒப்பிடலாம். குரு நாதனின் ஸ்பரிசத்திற்கு இசைந்து மற்றவைகளுடன் நேர்மையாய் இனிய கானங்களை அத்தந்திகள் தொனிக்கா

*வடக்கே உள்ள புத்தசமயிகளும் சீனர்களும், உலகத்திற்கே, ஒரு ஸ்வரம் உள்ளது என கவனித்துத் தெரிந்திருக்கிறார்கள். பெரிய நதிகளின் பேரிரைச்சல், வனங்களில் உள்ள மரங்களின் உச்சிகளின் சலசலப்பு, பெரியநகரின் தூரத்தில் கேட்கும் சப்தம், இவை ஒரு குறித்த ஸ்வரமாக வியக்தப்படுகின்றன என, பிரகிருதிதத்துவ சாஸ்திரிகள் (Physicists) கண்டறிந்திருக்கிறார்கள். இதைச் சீனர்கள் அநேக ஆயிரம் வருஷங்களுக்கு முன்னர் கண்டுபிடித்துள்ளார். "ஹொ ஆங்ஹோ" என்ற சீனதேசத்தில் உள்ள நதி வேகமாய்ச் செல்லுகிறதில் "குங்கு குங்கு" என்று ஒலிக்கிறதாம். அந்த ஸ்வரத்தைச் சீனர்களின் சங்கீத சாஸ்திரத்தில் "பெரிய தொனி" என்று சொல்லுவார்கள். நம்தேசத்தில் இவ்விதமான அபிப்பிராயமும் உண்டு. ஜகத்திற்கு ஸமஷ்டியாகிய ஒரு மூலநாதம் உண்டென்றும், அது "ஓம், ஓம்" என்ற பிரணவதொனியென்றும், சூக்ஷ்மமாகக் கவனித்தால் அது தெரியவருமென்றும் சொல்லுவார்கள்.

விடில், அவை அறுபடும்; எறியப்படும். சிராவகர்களான சிஷர்களின் மனங்களும் சேர்ந்து இவ்விதமே நேர்மையாக நிகழவேண்டும். குருவின் மனத்துடன், சிஷர்களின் மனங்கள் நேர்மையாக இசைந்து ஒருமையாக வேண்டும். குருவின் மனமோ ஈசுவரனின் மனத்துடன் இசைந்து நேர்மையாக நிகழும். சிஷர்களின் மனங்கள் அவ்விதம் நேர்மைப்படுத்தப்படாவிடின், குரு சிஷ்ய சம்பந்தமும் அற்றுப்போம்.

227. இவ்விதமாக, கொடிய வாம மார்க்கக்கூட்டத்தினர்களான* தமது ஆத்ம ஹத்தி புரிகின்றவர்கள் செய்வார்கள்.

228. ஞானப்பிரகாசம் விரும்புவோனே! ஜனசமூகத்தின் துன்பத்தால் உன் மனம் இளகும் தன்மையத்தாக ஆகிவிட்டதா?

229. அப்படித்தானு?..... அப்படியாயின் இன்னெறியில் பிரவேசிக்கலாம். ஆயினும், துக்கம்தோய்ந்தபயங்கரமான அத்துக்க நெறியில் நீ கால் வைக்குமுன், அன்னெறியில் தடுமாற்றங்களுக்கு ஹேதுவாகும் பள்ளங்கள் இன்ன இன்னவை என நீ அறியப்பாலது.

---

230. ஈகை, அன்பு, மனஇளகும் ஜீவகாருண்ணியம், என்ற திறவுகோலை வைத்துக்கொண்டு, தானம் என்ற வாயில் முன் நீ சாவதானமாய் இருக்கிருய். இன்னெறியில் இதுவே முதன்மையில் உள்ள வாயில்.

---

* = Dread Dad – Dugpa clan (in the English Text).

231. ஆனந்தமாய் யாத்திரை பண்ணுகிறவனே! கவன மாய்ப்பார்! உன் முன்னுள்ள வாயில், உயரமாயும் அகன்றதாயுமிருக்கிறது. இலகுவாய்த் தாண்டலாம் எனத்தோன்றுகிறது. அதன் வழியாய்ச் செல்லும் பாதை நேராகவும், சமமாயும், பசுமையாகவும் இருக்கிறது. அஃது அடர்ந்து இருண்ட காடுகளின்கண் சூரியப்பிர காசமுள்ள மைதானம் போன்றுள்ளது. அஃது அமிதாபா வான திவ்வியலோகத்தின் பிரதிபிம்பம் போன்றுள்ளது. அங்கே இரவில் பாடும் குருவிகள் என்ன, பிரகாசிக் கின்ற இறக்கைகளை உடைய பறவைகள் என்ன, இவைகள் பசுமையான கொடிகளால் அமையப்பெற்ற பர்ண சாலைகளின்மேல் உட்கார்ந்துகொண்டு யாத்திரைக் காரர்களான தீரர்களுக்கு உத்ஸாகமும் ஜயம் பெறுதலில் நன்னம்பிக்கையும் உண்டாகும் வண்ணம், இனிமை யாய்க் கானம் செய்கின்றன. புத்தராகவேண்டுபவரின் சீலங்கள் ஐந்தையும், போதநிலையின் சக்தியின் ஐந்து வகையான உற்பத்தி முறைகளையும், ஞானப்பயிற்சி யிலுள்ள ஏழு படிகளையும், பற்றி அவை கானம் செய் கின்றன.

232. செல்லுவாயாக! திறவுகோல் உன்னிடம் இருக் கிறது. உனக்குப் பயமில்லை. சாவதானமாய் இருக் கிறாய்.

233. இரண்டாம் வாயிலுக்கு வழியும் பசுமையானது தான்; ஆனால் அது செங்குத்தாக இருக்கிறது; குன்றின் மேல் சுற்றி சுற்றி ஏறி அதன் கற்சிகரத்துக்குப் போக வேண்டும்; அதன் கற்கரடுள்ள சிகரமானது மந்தமான

மஞ்சுவால் மூட்டம் பெற்றிருக்கிறது; அதற்கு அப்பால் எல்லாம் இருட்டாகவிருக்கிறது. அவன் (அப்பியாஸி) போகப்போக நன்னம்பிக்கையை உண்டுபண்ணிய கானம் மந்தமாகிக்கொண்டு வருகிறது. வர வர மென்மை கொண்டு வருகிறது. அவன் ஹிருதயத்தில் நன்னம்பிக்கைவர வரக் குறைந்துகொண்டு வருகிறது. அவன் மனதில் சந்தேகம் தோனிக்கிறது. அதனுல் அவன் நடை நிலைப்பின்றி தடுமாற்றம் பெறுகின்றது.

234. இன்னெறியில் பயிலுகின்றுனே! இதைக் கவனிப்பாய். முன்னர் எச்சரிக்கையாயிரு. பயம் உன்னைப் பற்றுமல் பார்த்துக்கொள். உன் உள்ளத்தில் உதயமாகும் சந்திரப்பிரகாசத்துக்கும், அதிதூரத்தில் நீ சிந்தித்திருக்கிற உயர் நலமுள்ள லக்ஷியத்திற்கும் மத்தியில், நிசிராத்திரியில் பறக்கும் மௌனமான கரு வௌவால் போல இந்த வஞ்சகமான பயம் குறுக்கிடும் காண். இதைப் பற்றிக் கவனம்கொள்.

235. பயம் கொடிது, கொடிது; ஓ! சிஷனே! பயம் மனேதைர்யத்தைத் தளர்த்தும், தொலைக்கும், செயலைத் தடுக்கும். சீலம் என்ற குணம் குன்றினுல் யாத்திரைக்காரன் இடறுவன். இந்தக் கரடு முரடான வழியில் முன்வினைப்பயனுய் ஏற்பட்டுள்ள இடையூறுகளான கற்கள் பாதங்களைக் கீறும், அறுக்கும், இரத்தம் வரும்படி காயப்படுத்தும்.

236. சிஷனே! உன் காலைச் சாவதானமாய் வை. சாந்தி என்ற நீரில் உன் மனம் ஸ்நானம் செய்யட்டும். அப்பெயருள்ள வாயிலைச் சமீபிக்கிருய். அதுவே பொறுமை, தைர்யம் அமைந்தவாயில்.

**237.** கண்களை மூடாதே. வயிர முத்திரையின் லக்ஷியத்தை விடாதே. (இது ஒருவித ஆஸனமும் முத்திரையுமாம்). இந்நிலையில் வைராக்கியத்தைப் பெருதவன் எப்போதும் மாரனது அம்பால் அடிபடுவான்.

238. நடுங்காதே. மனம் கலங்காதே. பயம் என்ற காற்று சொற்பம் அடித்தாலும் சாந்தி என்ற திறவுகோல் துருப்பெறும், சிக்கலாகும். துருப்பெற்ற திறவுகோல் கதவைத் திறக்காது.

239. நீ மேன்மேலும் செல்லச்செல்ல, இன்னெறியில் படுகுழிகளை அதிகமாகவே காண்பாய். இன்னெறியில் செல்லுகிறவனுக்கு ஒரே வெளிச்சம் வழிகாட்டும். அது தன் ஹிருதயத்தில் ஜ்வலித்துக்கொண்டிருக்கும் தைர்யம் என்ற ஜோதிதான். அது இவன் துணை. தைர்யம் கொள்ளக் கொள்ள, அது விர்த்தியாகும். பயம் கொள்ளக் கொள்ள, தைர்யம் என்ற வெளிச்சம் மங்கும். தைர்யம் ஒன்றுதான் வழித்துணை. அந்திப்பொழுதில் சூரிய அஸ்தமனமாகும் தருவாயில், மலை உயர் உச்சியில் கடைசியாகத் தங்கும் சூரிய கிரணமானது, மலைவாய்ப் பட்டு, மறைந்து காரிருள் உண்டாதல்போல, உன் உள்ளத்தில் உள்ள தைர்ய ஜோதியானது மறைந்துபோய் இருண்ட பயங்கரமான மருள் உன் பாதையில் படும். நின்ற இடத்திலேயே பயம் கொண்ட உன்னை இறுத்தும்.

240. அந்த அதோகதி வராமல், சீஷனே காத்துக் கொள். உன் அசுத்தமனத்தின் இருளை ஆத்மப்பிரகாசம் அகற்ற வேண்டுமானல் காமனைகள் எல்லாம் தொலைய வேண்டும். எல்லாச் சுயலாப சிந்தனையும் அகலவேண்டும்.

இந்நிலையுள்ளவனுக நீ இவ்விதம் கூறவேண்டும். "அழியும் இச்சரீரத்தைத் துறந்து விட்டேன். அதன் காரணமாம் அவாவை நசித்துப்போட்டேன். அதனுல் ஏற்பட்ட நிழல்கள் இனி என்னை பாதிக்கமாட்டா". இப்போதுதான், சுத்த மனத்திற்கும் அசுத்த மனத்திற்கும் முடிவான பெரும்போராட்டம் உண்டாயிற்று. * இந்தப் பெறும் போராட்டத்திலே யுத்தகளமே மூழ்கிப்போய்க் கவனித்துப்பார்த்திடில் கண் ணுக்கு மறைந்து போயிற்று.

241. சாந்தி என்ற வாயிலைத்தாண்டினவுடன், மூன்ரும்படி ஏறுகிருய். உன் சரீரம் உனக்கு அடிமையாயிற்று. உன் சேவகன். நான்காம்படிக்கு, ஆயத்தம் செய்துகொள். உன் உள்ளத்தைக்கவரும், மயக்கும், ஆசாபாசங்கள் இவ்விடத்தில் உள்ளன.

242. அந்த நான்காம் வாயிலை அணுகுமுன், அந்த வாயிலின் கதவு திறக்க உன்கையைத்தூக்கு முன், உன் மனத்தில் எழும் விர்த்திகளை எல்லாம் அடக்க வேண்டும். நுட்பமாய் நீ அறியாமல், வஞ்சகமாய் உன்னுள்ளம் என்ற பிரகாசமான கோயிலுக்குள், கூப்பிடாமல் பதுங்கிநுழையும் இந்திரியச் சேஷ்டைகளால் உண்டாகும் எண்ணக்கூட்டங்களை அறுத்தல்வேண்டும்.

243. அவைகள் உன்னை மேற்கொள்ளாமல் இருக்க விரும்புவாயாகில், உன் மானஸிக புத்திரர்களாகிய அவ்வெண்ணங்களை, அச்சிந்தனைகளை, உனக்குக் கெடுதல் செய்யாதபடிச் சக்தியற்றவைகளாக செய்துகொள்ளு. ஒருவரும் பாராமலும் ஒரு இந்திரியத்துக்கும் புலப்படா

*இதுவே கீதையில் சொல்லியிருக்கும் குருக்ஷேத்திரச்சண்டை.

மலும் மனிதனுல் ஏற்பட்ட சந்ததிகளாகவும் அவனுக்கும் அவனுல் பூமியில் உண்டுபண்ணிய உடைமைகளுக்கும் வார்சுகளாகவும் அவனேச் சுற்றிக்கொண்டே அவைகள் நிகழ்கின்றன. தோற்றமாத்திரத்தில், பூர்ணமாயிருத்தலில்பாழையும், அவ்விதமேதோற்றமாத்திரத்தில், பாழாய் இருத்தலில் பூர்ணத்தையும், நீ ஆராய்ந்து அறியவேண்டும். ஓ! தீரனே! உன் ஹிருதயமென்ற ஆழமான கிணற்றை நன்ருய் உள்நோக்கிப்பார்த்து விடை அளி. வெளித்தோற்றங்களாகிய நிழல்களேப் பார்க்கின்றவனே! உன் உள்ளத்தின் சக்திகளே நீ அறிவாயா?

244. அதை அறியாமற்போனுல், நீ கெடுவாய்.*

245. நான்காம் படியில் நடைபெறுகிறவனுடைய சுத்தமனத்தில், காமனேயின் காற்று சொற்பமேனும் அடிக்குமாகில், சலனமற்ற சுத்தமனம் என்ற அச்சுவரில் படும் அசைவற்ற நிர்மலமான ஜோதிக்கு ஒரு சலனம் உண்டாகும். மாயா உலக விஷயங்களில் விருப்பு அல்லது துக்கம் என்ற அலே சிறிதேனும் உன் அந்தக்கரணம் வழியாய்த்தோன்றுமாகில், மின்னல் போன்று ஒரு கணப்பொழுதேனும் இருக்குமாகில், சிரமத்தினுல் முன்னேறிய மூன்று படிகளினின்று நீ நழுவி விழுவாய் அந்தகரணம் என்பது உன்னுடைய அசுத்த மனதுக்கும் சுத்தமனதுக்கும் நடுவில் உள்ள பாதை. அப்பெரும் பாதையில் இந்திரியங்கள் விளேயாடுகின்றன. இந்திரியங்களோ அகங்காரம் என்பதை பலங்கொண்டு எழுப்பும் தன்மையன.

---

* முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்திற் கண்கொண்டு காண்பதே யானந்தம்.

என்ற திருமூலர் வசனம் இங்கு கவனிக்கத்தக்கது.

246. ஏனெனில் நித்தியமான வஸ்துவினிடம் மாறுதல் இல்லையென்று அறி.

247. பூர்வீகர்களின் ஸம்பிரதாய முறைகளை அனுஷ்டித்தவரான, பூரணம் பெற்ற ததாகதர் என்ற கௌதம புத்தர் அருளிய உபதேசமாவது—"எட்டுவிதக்கொடிய துக்கங்களை, முற்றிலும், என்றும், உன்னைப்பற்றுமல் விலக்கு; இன்றேல், ஸ்திரமான ஞானநிலையை அடைய மாட்டாய். மோக்ஷம் என்ற நிர்வாணபதத்தைப் பெற மாட்டாய்."

248. **வைராக்கியம்** என்ற குணசம்பத்தானது நேர்மையானதாகவும், கண்டிப்பானதாகவும் இருக்கிறது. இந்நிலையின் உண்மையை நன்றாய் அறிந்து உரிமைப்படுத்துவாயாயின், உன் மனத்தையும், இந்திரிய ஞானத்தையும் முன்னைவிட அதிகத்தெளிவாக்க வேண்டும். நாசப்படுத்தும் கர்மம் செய்யாமலிருத்தலில் முன்னைவிட நீ அதிக சுதந்தரமுள்ளவனாகவும் ஆகவேண்டும்.

249. பரிசுத்தமான (ஆலயத்தால்) சைதந்நியத்தால், உன்னை நிறைப்பிக்கொள்ளு. ஈசுவர பிரக்ஞையுடன் ஒருமைப்படு. அத்துடன் ஒருமைப் படுவாயாகில், உன்னை வெல்ல ஒருவராலும இயலாது. அதினின்று வேறுபடுவாயாகில் உலகமாயாவிகாரங்களுக்குக் காரணமான ஸம்விர்த்தி சத்தியத்திற்கு* உள்ளாகி, அதன் விளையாட்டுக்கு இருப்பிடமாக ஆவாய்.

---

* பரமார்த்திக ஸத்தியம், ஸம்விர்த்தி சத்தியம், என சத்தியம் இருவகைத்தாம். முன்னது உள்ளபடியான உண்மை-பின்னது ஆபேக்ஷித உண்மை. வாஸ்தவத்திலில்லை. இதுவே விவகார சத்தியமெனப்படும்.

250. ஆலயத்தின் ஆத்மபிரகாச அம்சத்தைத் தவிர, மனிதனிடமுள்ள மற்றவை எல்லாம் அஸ்திரமானவை. மனிதன் என்பான், ஆலயத்தின் சுத்த நிர்மலமான ஓர் கிரணம் அவன் உள் நோக்கில் நிர்மலமான பிரகாசங் கொண்ட கிரணம், சுடர்; வெளிப்பார்வையில், கீழே களிமண்ணுலாய உருவம். அக்கிரணம், கதிர், சுடர், என்பதானது உன் உயிர்த்துணை; அதுதான் உனது உண்மையான ஆத்மா, காவலன், மௌனமான நினைப்புக் கொண்டவன் அசுத்த மனத்தினுல் கட்டுண்டு அதன் பலியாவான்; தடுமாற்றமுள்ள உன் சரீரத்தால்தான் உன் மனம் துன்பமுறும். அவை இரண்டையும் வசப்படுத்து, மேற்கொள்ளு. அப்படிச் செய்தால் சமீபிக்கின்றத் "திராசுபோன்ற வாயிலுக்குத்" தாண்டிச் செல்லுதல் சாவதானமாக இருக்கும்.

251. "அக்கரை" யேற ஆயத்தமாக இருக்கின்ற தீரனே! மனம் தளராதே, சந்தோஷமாக இரு, மாரனது கூட்டங்களின் வஞ்சனையான மயக்கங்களுக்குள்ளாகாதே. எல்லையற்ற ஆகாயத்தை வியாபித்துக்கொண்டு உன்னைத்தாழ்த்தக் கருதும் பலவிதமான துர்பூதங்களின் மோசமான ஏய்ப்புக்களை கவனியாதே; அவைகளை அலக்ஷியம் செய்.

252. உறுதியாய் இரு! மத்தியிலுள்ள வாயிலை இப்போது அணுகுகிருய். அதுவோ துக்ககரமான வாயில். அதனிடம் பல்லாயிரக் கணக்கான வஞ்சகமான கண்ணிகள் உன்னைப்பிடித்து வசப்படுத்த ஏற்பட்டுள்ளன.

253. பூர்ணம் பெற விரும்புவோனே! அந்தவாயிலைத் தாண்ட விரும்புவாயாகில், உன் எண்ணங்களை சுவாதீனப்படுத்து; சித்தவிர்த்திகளை அடக்கு.

254. நித்தியமான உண்மைகளை அறிய விரும்புவோனே! அந்த எல்லையை அடையப் பிரியப்படுவாயாகில், உன்மனத்தை சுவாதீனம் செய்துகொள்.

255. மாசற்றதும் சுத்தமானதுமான அந்தர்கதமான ஜோதியை உன் மனக்கண்ணால் உற்றுப்பார். உன்னிடம் உள்ள சுவர்ணத் திறவுகோலை உபயோகப்படுத்து.

* * * * *

256. இப்போது கஷ்டமான வேலை முடிந்தது. அநேகமாக நீ செய்யவேண்டிய முயற்சியும் முடிவு பெற்றது. உன்னை விழுங்கும்படியான அகன்ற ஆழ்ந்த பாழின்மேல் பெரும்பாலும் பாலமும் போட்டாய் விட்டது.

* * * * *

257. மனிதனின் ஆசாபாசங்கள் என்ற வாயில் முகப்பைச் சுற்றியுள்ள அகழியை இப்போது தாண்டி விட்டாய். மாரனையும் அவனது கொடிய கூட்டங்களையும் ஜயித்து விட்டாய்.

258. உன்னுள்ளத்தின் களிம்பை அதாவது மாசை அகற்றி விட்டாய். அசுத்த காமனைகளை அதினின்று துறத்தி விட்டாய். கம்பீரமான யுத்த வீரனே! ஆயினும் உன்வேலை இன்னும் முடியவில்லை. பரிசுத்தமான தீவு போன்றுள்ள பிரத்தியகாத்மாவைச் சுற்றிலும் உயர்ச் சுவரை எழுப்பு, இந்த உயர் நலம் அமைந்த பராக்கிரமச் செய்கையை நிறைவேற்றி விட்டேனென திருப்தியும் இறுமாப்பும் உன் மனம் கொள்ளாமல் தடுக்கும் அணை அதுதான்.

259. இறுமாப்புக் கொள்ளவே, நீ செய்த வேலை பாழாகும். வெற்றியை அடைந்தாலும், மாயா பிரபஞ்ச ஸாகரத்தில் உண்டாகும் அலைகள் மோதி உன்னுள் இருக்கின்ற பரிசுத்ததீவான பிரத்தியகாத்மாவையும் உன்னையும் ஆழ்த்தி விழுங்கி விடாமல், அந்த சுவரை பலமாய் எழுப்பு.

260. முன் பிரஸ்தாபித்த, தீவு என்பதை ஒரு மானாக எண்ணு. உன் சித்தவிர்த்திகளை உயிரினது பிரவாககதியில் மேற்சென்றுகொண்டிருக்கும்;உன்னை நோகச்செய்து ஹிம்ஸிக்கிறவைகளுமான வேட்டை நாய்கள் போன்றன எனமதி. தூய்மையான (பரமார்த்த ஞானம் அல்லது ஸ்வஸம்வேதநம்—தன்னைத்தான் அறிதல் என்று பெயர் பெறும்) சரண்ய நிலையாகிய ஞான மார்க்கத்தை அடையுமுன், குலைக்கும் அந்தக் குரூரமான நாய்கள் மேற்கொண்டால், அம்மானுக்கு வரும் கேடு, அந்தோ! என்சொல்லுவேன்!

261. ஞானமார்க்கத்தில் ஸ்திரமாய் நீ நிற்கவேண்டுமென்றால், அது உனதாக ஆகவேண்டுமென்றால் சுக துக்கங்களைத் தாண்ட விரும்புவோனே! உன்மனம் பழுத்த மாங்கனிபோல ஆதல் வேண்டும். அதன் பொன்போல் ஒளி கொண்ட சதை எவ்விதம் மிருதுவாகவும் இனிமையாகவும் இருக்கிறதோ, அவ்விதம் பிறர் துக்கம் துயரங்களில் உன்மனம் இளகவேண்டும். அதன் உள் கொட்டையானது எவ்விதம் கடினமானதாக இருக்கிறதோ, அவ்விதம் உன் சொந்த துக்கம் துயரங்களில் மனம் இளகாமல் உறுதியாகவும் மனச்சோர்வில்லாமலும் இருத்தல் வேண்டும்.

262. அசுத்தமனதின் வலைகளில் சிக்காமல் உன் சுத்த மனத்தை உறுதி பெறும்படி செய்துகொள். அதினால் *"வஜ்ஜிரதரன்" என்ற பெயர் பெற அருகனாவாய்.

263. பூமியின் கண் ஆழமாய்ப் புதைந்துள்ள வயிரக் கல் பூமியின் மேலுள்ள பிரகாசங்களை எவ்விதம் பிரதி பிம்பிக்காதோ, அவ்விதமே உன் மனமும் உன் ஆத்மா வும் இருக்கின்றன. தியான மார்க்கத்தில் முற்றும் அழுந் தியவனாக நீ இருக்கின்றமையால், மாயப்பிரபஞ்ச விஷயங் கள் அவைகளில் பிரதிபிம்பிக்கப் பெறா.

264. அங்கிலை பெற்றாயானால், மார்க்கத்தில் இனி தாண்டவேண்டிய வாயில்களின் கதவுகள் தாமே திறந் திடும், நீ சுகமாய்ச் செல்லலாம். பிரபஞ்சத்தின் மஹாபல மானது எதுவும் உனக்கு லக்ஷியமில்லை; உன் கதியைத் தடுக்க இயலாது. இனி நீ மேற்செல்ல யாதொரு தடையு மில்லை. ஏழுபடியுள்ள மார்க்கத்தின் எஜமானன் ஆகி விட்டாய். அது உன் சுவாதீனமாயிற்று. வாயால் சொல்ல முடியாத பல சோதனைகளுக்கும் துக்கங்களுக் கும் உட்பட்டு நடைபெறுகின்ற சீஷனே? அங்கிலையைப் பெற்றாயானால் உன்னைத்தடுக்க யாவராலும் இயலாது.

265. அங்கிலையைப் பெறும்வரை இன்னும் மேன் மேலும் பெருகிய சோதனைகள் உண்டு. உன்னை, ஸர்வ சிந்தனைமயமாக நீ உணரவேண்டும், ஆனால் உன் மனம் சிந்தனை அற்று இருத்தல் வேண்டும்.

266. உலகப்பற்று என்ற எந்த காற்றும் என்ன பலங்கொண்டாலும் உன்னை சலிப்பிக்காதபடி, சித்த

*உயர்வற உயர்நலம் பெற்ற புத்தரின் பெயர்.

ஐகாகிரகம் பெற வேண்டும். ஒரு நிலைப்பட்ட மனத்தினனாய் ஆகவேண்டும். இவ்விதம் புனிதமாய், உள்ளம் என்ற கோயில், கிரியை, சப்தம், உலகசம்பந்தமான வெளிச்சம், இவைகள் அற்றதாய் இருத்தல் வேண்டும். உறைபனியால் பீடிக்கப்பெற்ற வண்ணாத்திப் பூச்சியானது, உயிர் உள்ளடங்கி சவமாய் வாயிற்படியில் விழுமாறு, உலக சம்பந்தமான எல்லாச் சிந்தனைகளும், அக்கோயில் முகப்பில் சவமாய் மடியவேண்டும்.

267. இதோ! எழுதியிருக்கும் உபதேசத்தை உற்றுப் பார்:—"காற்றில்லாத இடத்தில் உள்ள விளக்கு அசையாமல் இருத்தல் போல, யோகியின் மனம் அடங்க வேண்டும்."* சலிக்கும் காற்று அடிக்க, விளக்கின் ஜ்வாலை அசையும், அப்படி அசையும் ஜ்வாலை, மருளான, வஞ்சகமான, நிழலை உண்டாக்கும். மயலுள்ள அக்கரு நிழல் உன் சுத்தமான உள்ளம் என்ற கோயில்மேல் படியும்.

268. பின்பு அதனால், சத்தியத்தை நாடுபவனே! காட்டில் திரியும் மதங்கொண்ட யானைபோல் உன் மனம் மாறிடும். காட்டிலுள்ள மரங்களை தன் பகைகள் என நினைத்து மதிமயங்கி, வெய்யிலில் எப்பொழுதும் சலித்துக்கொண்டே இருக்கும். நிழல்களைக் கொல்ல வேண்டுமென்ற ஓய்வில்லா முயற்சியில் மாண்டு போவதுபோல் ஆவாய்.

269. எச்சரிக்கையாக இரு. தெய்வத்தன்மையான ஞான பூமியை அடைந்தும் சுயலாபத்தை ஓம்பில், கால் இடறி மோசம் போவாய்.

---

*கீதை 6-ம் அத்தியாயம—19-ம் சுலோகம் பார்க்க.

**270.** எச்சரிக்கையாக இரு. தன்னை மறக்கிறேன் என நினைந்து, மனச்சுவாதீனத்தை விட்டு விட்டு உன் வெற்றிகளின் பயனை இழந்து மோசம் போகாதே.

**271.** அசைவற்று இரு. அதில் கவனம் வை. அற்பச் சலனம் உன்னை வீழ்த்திவிடும். அது நீ நடைபெறும் மார்க்கத்தினின்று அகற்றித் தள்ளிவிடும். சந்தேகம் என்பது பசைபோல் ஒட்டும். ஆழமான சேற்றில் விழுவாய்.

**272.** ஆயத்தம் பண்ணு. முன்னாலேயே எச்சரிக்கையாக இரு, முயன்று ஒருகால் தவறிப்போயிருப்பாயாகில், தீரனே பயம் கொள்ளற்க. தைரியமாக போர்புரிக. திரும்பத் திரும்ப எதிர்த்து காரியத்தை சாதிக்கச் செல்லுக.

**273.** பயமற்ற வீரன், தன் தேகமெல்லாம் காயங்கள் ஏற்பட்டு, அரிய இரத்தம் பெருகி ஓடினும், மனம் தளராமல் திரும்பத் திரும்ப பகையை எதிர்ப்பான். பகையை அவன் கோட்டையினின்று துரத்தி அப்புறப் படுத்துவான். தான் இறக்கு முன் அவனை வெல்லுவான். அவ்விதமே நீயும் நட. தோல்வியுற்று கஷ்டப்படுகின்றவர்களே! நீங்கள் தோல்வி அடையினும், அவன்போல தைர்யமாய் நீங்களும் நடமின். உங்களுள்ளம் என்ற கோட்டையிலிருந்து பகைவர்களை எல்லாம் துரத்துமின். வெற்றி கொள்மின். பேராசை, கோபம், துவேஷம், இவைகளை அகற்றுமின். ஆசை என்பதின் நிழலே கூடாது. அதை அறுமின்.

*　　*　　*　　*　　*

274. ஜனசமூகத்தின் சுகிர்தத்தின் பொருட்டுப்பாடு படும் புண்ணியனே! ஒவ்வொரு அபஜயத்தையும், உண்மையில் ஜயம் என்றே நினை. உண்மையான ஒவ்வொரு யத்தனத்திற்கும் உற்றகாலத்தில் பலன் உண்டாகும். சீஷன் ஹிருதயத்தில் முளை கொண்டு உண்டாம் சுகிர்தமான விதைகள் யாருமறியாமல் வளர்கின்றன. ஒவ்வொரு யத்தனம் செய்யுங்கால், அவைகளின் தாள்களும் தண்டுகளும் பலமுறுகின்றன. நாணல்போல் சாய்ந்து கொடுக்கும்; அவை ஒடியா, அழியா. உற்ற காலம் அமைய, அவை புஷ்பிக்கும்.*

* * * * *

275. ஆனால் ஆயத்தமாக நீ வந்தாயானால், உனக்குப் பயமில்லை.

* * * * *

276. இனிமேல் ஏழுபடிகளில் 5-ம் படியில் உள்ள வீரியம் என்ற வாயில் வழியாய் உனது மார்க்கம் தெளிவாய் ஏற்படுகிறது. தியானம் என்ற துறையை நீ அணுகுவாய். அது ஆறும்படி. அதுவே போதி வாயில்.

277. தியானம் என்ற வாயில், ஸ்படிகம்போன்ற வெண்மையான ஸ்வச்சமான பாத்திரம். அதனுள் ஆத்மஜோதியான பிரஞ்ஞை என்ற சுவர்ணம் போன்ற தீபம் அசையாமல் பிரகாசிக்கின்றது.

---

*சீஷன் முயற்சிக்குங்கால் உண்டாகும் ஆசாபாசங்களின் இழுப்பு இதில் சொல்லியிருக்கின்றது. அவைகளை ஜயிப்பானாகில் அவைகள் நல்ல சீலம், ஞானசம்பத்து என்ற வித்துக்களுக்கு உரமாகும். நற்குணம் முதலியவை, பூர்வஜன்ம ஸம்ஸ்கார விசேஷத்தின் பயனும் என்று அறிக.

278. நீ அந்த பாத்திரமாவாய்,

279. இந்திரியங்களின் விஷயங்களை விட்டு உன்னை விலக்கிக்கொண்டிருக்கிருய். "உள்ளபடி பார்த்தல்" "உள்ள படி கேட்டல்" என்ற மார்க்கத்தில் நடைபெற்ருய். பிரக்ஞை என்ற ஜோதியின் முன்நிற்கிருய். இப்போது திதீக்ஷை* என்ற நிலையை அடைகிருய்.

280. ஓ சீஷனே! நீ சாவதானமாய் இருக்கிருய்.

* * * * *

281. பாபங்களை த்வம்ஸம் செய்பவனே! சுரோதாபத்தி யானவன் 7-ம் படியைத்தாண்டவே, பிரபஞ்சமுழுமையும் பூரித்து சந்தோஷிக்கிறது. பயபக்தியுடனே அவனைக் கொண்டாடுகிறது. பிரபஞ்சமுழுமையும் அவன் வசமா கிறது. "ஒருமஹாத்மா தோன்றியிருக்கிருர். ஒரு மன்வந் தரமுழுமையும் ஆளும் திறமையுடையவர் அவதரித் திருக்கிருர்" என, பிரபஞ்சத்திலுள்ள எல்லா வஸ்துக் களும் ஆரவாரிக்கின்றன. வெள்ளி (சுக்கிரன்) இரவில் புஷ்பிக்கும் புஷ்பங்களுக்கு இந்த நன்மையான சமா சாரத்தை தெரிவிக்கின்றது. இதை சிறு ஓடை அதன் கண்ணுள்ள சிறு கூழாங்கற்களுக்கு அறிவிக்கின்றது. கருமையான சமுத்திர அலைகள், இந்த நலம் அமைந்த திவ்விய செய்தியை பாறைகளில் மோதுங்கால், கோஷிக் கும். மகரந்தங்களை சுமந்துகொண்டு உலாவும் இளம் தென்றல் பள்ள நிலங்களில் இந்த சங்கதியைப் பரப்பும்.

---

*திதீக்ஷை — ராஜயோகமுறையில் 5-ம் நிலைமை; பொறுமை, சகித்தல், சந்தோஷம் வந்தாலும் துக்கம் வந்தாலும் இரண்டிலும் மனம் மாருமல் ஒரு நிலையாய் இருத்தல் என்பதாம்.

கம்பீரமான தேவதாரு விருக்ஷங்கள் இந்த சம்பவத்தை மெல்லிய கானத்தால் தொனிக்கும்.

282. இப்போது இவன் ஒரு வெண்மையான ஸ்தம்பமாக மேற்கே நோக்கியவனாக நிற்பான். அவன் முகத்தில் நித்தியமான சிந்தனை என்ற உதய சூரியன் தன்னுடைய கம்பீரமான முதற்கிரணங்களைச் சொரிகிறான். அவன் மனம் திரையற்றதும் எல்லையற்றதுமான சமுத்திரம் போன்றிருக்கிறது. கறையற்று திசை எங்கும் பரவுகின்றது. பிராணனையும் மரணத்தையும் தன் பலமான கையில் வைத்திருக்கிறான்.

283. உண்மையாகவே, அவன் பராக்கிரமமுள்ளவன். அவனாகவேயுள்ள உயிர்கொண்ட சக்தி, இப்போது சுதந்தரம் பெற்றது. அச்சக்திகொண்டு அவன் உயர் பிரஹ்மா, இந்திரன், இவர்களை விடவும், எல்லா தேவர்களை விடவும் உயர்வான பதவியை அடையக்கூடும். இப்போதே அவனது பெரிய பலனை உண்மையாகவே அவன் அடைவான்.

284. இந்நிலையில் அவன் நன்கு பெற்ற சித்திகளையும் மஹிமைகளையும் சுயப்பிரயோஜனார்த்தமாக உபயோகிப்பானோ? மருள்நீங்கிய உத்தமபுருஷன் எவ்விதம் செய்வான்?

285. பிரபஞ்சத்தின் குப்தமான உண்மைகளை அறிய விரும்புவோனே! பரிசுத்தரான ததாகதர் பெற்ற நெறியை அனுஷ்டிப்பாயாகில், அச் சக்திகளும் சித்திகளும் மஹிமைகளும் சுயப்பிரயோஜனத்திற்காக அல்லவெனஅறிவாய்.

286. (தேவர்கள் வசிக்கும்) மேருமலையின் உச்சியி னின்றுவரும் ஜலப்பிரவாகங்களை அணைபோட்டுஅடைப் பாயோ? உன் சொந்தலாபத்தைக்கருதி உனக்குப் பயன் படும்படியாய் வாய்க்கால் வழி அவைகளை கொண்டுபோ வாயோ? காலச்சக்கரங்கள் என்ற மலை உச்சிகளின் வழி யாய்ப்பிறந்த இடத்தை நோக்கிப் போகும்படி அந்த ஜலப்பிரவாகங்களைத் திருப்புவாயோ?

287. கஷ்டப்பட்டு சம்பாதித்த அந்த ஞான வெள்ளம் உயர்நலமுள்ள தெய்வசம்பத்துப் பொருந்தியது. அது இனிமையான ஜலமாக என்றும் ஓடிக்கொண்டிருக்க வேண்டுமாகில், அதை ஒரே இடத்தில் தேங்கும்படியான சிறு குளமாகச்செய்யாதே.

288. எல்லையற்ற நித்தியரான அமீதாபாவுடன்* கூட்டுற வாக காரியஞ்செய்ய நீ விரும்புவாயாகில், (அதாவது ஈசுவரசங்கற்பத்தை நீ நிறைவேற்றவேண்டுமானல்) இரண்டு போதிசத்வர்களைப்போல நீ பெற்ற ஞான ஒளியை மூன்று லோகங்களுக்கும் உபயோகப்படும்படியாகச் செய்யவேண்டும்.

289. நீ அடைந்திருக்கிறதும் சாதாரண மனிதர் பெருததுமான தேவஞான வெள்ளம் உன்னிடத்திலேயே

---

*அமிதாபா — என்ருல் பரபிரஹ்மம்.

(பௌத்த மதத்தின் மஹாயான ஸம்பிரதாயத்தில் அமிதாபா என்ற அகண்ட ஆகாசத்தில் இரண்டு போதிசத்வர்கள் உண்டு. அவர்கள் பூலோகம், புவர்லோகம், ஸ்வர்க்கலோகம் என்ற மூன்று லோகங்களுக்கும் ஞான ஒளியை அருளுகிருர்கள். அவ்வொளி, யோகிகளின் மனத்தில் பட, அவர்கள் நலம் பெறுகிருர்கள். அதன் மேல் அந்த யோகிகள் மனிதர்களுக்கு நலம் செய்கிருர்கள்.)

தங்கிப்போகாமல், உன்னிடமிருந்து வேறு ஒரு பாத்திக்குப்போகவேண்டும். அவ்விதம் போகும்படியாக நீ ஆலயத்தின் வாய்க்காலாக ஆகவேண்டும்.

290. சிஷனே! குப்தமார்க்கத்தில் நிற்பவனே! அம்மார்க்கத்தின் புதிய புனிதம் பயக்கும் ஞானஜலம் கைப்பான சமுத்திரத்தின் அலைகளைத் திதிப்பிக்கும் தன்மையது என்று அறிவாய். அச்சமுத்திரமோ! துக்கங்களால் வருந்தும் ஜனங்கள் விடும் கண்ணீர்ப்பெருக்கால் உண்டாகும் (ஸம்ஸாரமான) மகா சாகரம் என்று நீ அறிவாய்!

291. அந்தோ! உயர்ந்த ஆகாசத்திலிருக்கின்ற ஸ்திரமான நக்ஷத்திரம் போன்று நீ பிரகாசிக்கும்படி ஏற்படுவாயாகில், அந்த ஆகாச ஜோதியானது பிறர் பிரயோஜனார்த்தமாகவே தன் பிரகாசத்தை வெளியிடவேண்டும். தனக்கு அற்பமேனும் பயன்படுத்திக்கொள்ளக் கூடாது. எல்லோருக்கும் கொடுக்கவேண்டுமேயொழிய ஒருவரிடமிருந்தும் கொள்ளக்கூடாது.

292. அந்தோ! மலைப்பள்ளத்தாக்குகளில் உறையும் சுத்தப்பனிக்கட்டி போல் ஆய்விட்டாய். வெளிஸ்பரிசத்துக்கு சுரணை அற்றுப்போகும்படியான அவ்வளவு குளிர்ச்சி உள்ளதாக அப்பனிக்கட்டி இருக்கிறது. ஆனால் அஃது அதன் கீழே உறங்கும் விதைகளுக்கு உஷ்ணகரமான ஆதரவாய் அமைகிறது. பற்கிட்டும்படியான கொடிய வடக்குப்பனிக்காற்று அப்பனிக்கட்டியைத் தாக்குங்கால், பசியை ஆற்றக்கூடியதும் அறுவடையாக வேண்டியதுமான மகசூல் பலனுள்ள பூமியை அப்பனிக்கட்டியானது அக்கொடிய குளிரினின்று பாதுகாக்கும் தன்மையதாகும்.

293. ஜனங்களின் நன்றி அறிதலைப்பாராட்டாமலும், அதை எதிர்பாராமலும், பிறர் அறியாமலும், இனிவரும் அநேக கல்பகாலங்களில் ஜீவிக்க நீ, தானே உன்னை அர்ப்பணம் செய்து விட்டாய். ஜனசமூகத்தின் *இரக்ஷணைச் சுவரின் கணக்கில்லா கற்களில் ஒரு கல்லாக நீ அமையப் போகிறாய். ஏழாம் வாயில் தாண்டுவாயாகில் உன் முன்னர் ஏற்படுவது இதுவே. இந்த இரக்ஷணைச்சுவர் கருணாநிதிகளான அநேக மஹாத்மாக்களின் கைகளால் கட்டப்பட்டு அவர்களது கிலேசங்களால் நிர்மாணமாகி அவர்களது உதிரத்தால் இணைக்கப்பெற்றிருக்கிறது. மனிதன் மானிடத்தன்மையுடையானாகையால் இன்னும் அதிகக் கொடிய பெருகிய துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் அவன் உள்ளாகாமல் அவனைக் காப்பாற்றும் வண்ணம், இச் சுவர் ஏற்பட்டுள்ளது.

294. இப்படி இருந்தும், இதை மனிதன் அறிகிறான் இல்லை; பார்க்கிறான் இல்லை; அந்த ஞானமொழியைக் கேட்கிறான் இல்லை; ...... இதற்கு அவன் அறிவீனமே காரணம்.

295. சிரத்தைகொண்ட சுத்தமான மனமுடையானே! நீ இதைக்கேட்டிருக்கிறாய். எல்லாம் அறிந்திருக்கிறாய். ...... அதனால் சரியானபடி தெளிந்து தெரிந்து நட. மறுபடியும் சொல்லுகிறேன் கேள்.

---

*நிர்மாணக்காயர்களான யோகிகள் மஹாத்மாக்கள். இவர்கள் நெடுங்காலமாய் செய்துவந்த நன்முயற்சிகளான சத்சங்கற்பங்கள் திரண்டு ஒருங்கு சேர்ந்து இனி அதிகக்கேடு வராமல் ஜனசமூகத்தின் இரக்ஷிப்புச் சுவர்போன்று ஏற்படுகின்றன. இவ்விதம் கர்ணபரம்பரையான ஞான உபதேசமுள்ளது.

296. தீக்ஷைமார்க்கத்தில், சுரோதாபத்தியானுய் நீ. சாவதானமான நிலையைப்பெற்றிருக்கிருய். அம்மார்க்கத்தில், களைப்புற்ற யாத்திரீகன் இருளையே மட்டும் சந்திப்பான்; முட்களால் கீறப்பெற்றுக்கைகள் ரத்தம் சொரியும்; கெட்டியானவும் கூர்மையானவுமான சக்கிமுக்கிக் கற்களால் பாதங்கள் பிளவுபெறும்; நோதலடையும்; கொடுமைகள் எல்லாம் சம்பவிக்கும். ஆயினும் அடுத்து சுகிர்தமுண்டு; பெரிய பலன் உண்டு.

297. சாந்தமாயும், பொறுமையாயும், மனம்தளராமல், ஞானயாத்திரை செய்பவன் நிர்வாணபதத்திற்குப் போகும் வழியைப்பற்றிக்கொண்டு மெல்ல மெல்லச் செல்லுகின்ருன். தன் பாதங்கள் எவ்வளவுக்கெவ்வளவு வெட்டுண்டு நோதல் அடைகின்றனவோ அவ்வளவுக் கவ்வளவுதான் பரிசுத்தனுக ஆகிருன் என அறிவான். நிர்வாணம் அடையுமுன் இவன் பிறப்புக்கள் குறுகிச் சீக்கிரம் கழியும். அவை ஏழேயாம் எனவும், இவன் அறிவான்.

* * * * *

298. இதுதான் தியான நெறிமுறை; யோகியின் லக்ஷியம். இதுவே சுரோதாபதிகள் கோரும் ஆனந்தமயமான எல்லையாம்.

299. அர்கத நெறியை அடைந்தால் இவ்விதமன்று.

300. அந்நிலையில் கிலேசம்முற்றும் அற்றுப்போயிற்று. ஜீவித்திருக்க வேண்டுமென்ற திருஷ்ணை வேரோடு போய் விட்டது, (பிறப்பினும் ஆசையின் வித்துக்கள் வறுக்கப் பட்டன). இன்னும் ஒரு வார்த்தை சொல்லுகிறேன்

கேள். சீஷனே! திவ்விய கருணையை அழிப்பாயா? அது ஒரு குணமன்று, சீலமன்று, கருணை என்பது தர்மங்களின் தாமமுறை; என்றும் உள்ள நேர்மையான தன்மை; அதுவே ஆலயத்தின் ஆத்மாவாக *எல்லையில்லாமல் எங்கும் பரவிய சத்தாம்; என்றும் எங்கும் உள்ள சத்தியத்தின் ஜோதியாம்; அஃது எல்லாம் நேர்மையாகவும் சரியாகவும் நடை பெறுதலுக்குக் காரணமான அன்பின் நித்திய தர்மமாம்.

301. நீ அவ்வன்புடன் ஒருமைப்பட ஒருமைப்பட, நீ அச்சத்துடன் உருகி இரண்டறக் கலக்க அதனால் நீயே பூர்ணமாக கருணைவடிவாக அமைவாய்.

302. இஃது ஆரிய மார்க்கம். இது பூர்ணர்களான புத்தர்கள் நடைபெறும் மார்க்கம்.

303. இதைப்பற்றி திவ்விய கிரந்தங்கள் உனக்கு எவ்விதம் உபதேசிக்கின்றன என்பதைக்கேள்:—

304. "ஓம்! அர்ஹர்கள் எல்லாரும் நிர்வாணபதத்தின் இனிய பழத்தை பெற்றார் இல்லை!

305. ஓம்! எல்லா புத்தர்களும் நிர்வாண தர்மத்தில் நுழைந்தார் இல்லை" என நான் நம்புகிறேன்.

306. ஆம், ஆம், ஆரியமார்க்கத்தில் இனிமேல் சுரோதாபதியாக நீ இல்லை. நீ (புத்தனுகவேண்டியவன்) போதிசத்துவராகிறாய். நதியைத் தாண்டிவிட்டாய். தர்ம காய

* அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலா
ரன்பே சிவமாவ தாரு மறிகிலா
ரன்பே சிவமாவ தாரு மறிந்தபி
னன்பே சிவமா யமர்ந்திருந் தாரே.

ஆடையை அணிய உரியவனுகிருய். சம்போக காயம் நிர்வாணநிலையைவிட உயர்நலமுள்ளது. நிர்மாணகாயம் இன்னும் அதிக உயர்நலமுள்ளது. இதுவே அன்பு ஆர்ந்த புத்தரின் நிலைமை!*

307. இப்போது தலைவணங்கி நன்ருய்க்கேள். கருணையே சுவரூபம் எடுத்து பேசுகிறது—"ஓ! போதி சத்வரே! ஜீவகோடிகள் எல்லாம் துக்கத்தால் வருந்த, நீவிர்மாத்திரம் தனித்து சுகிர்தம் பெறுவீரோ? உலகம், ஓ என்று கதற நீவிர் மாத்திரம் ஆனந்தம் அடைவதும் மோக்ஷம் பெறுவதும் எங்ஙனம்?"

---

*அர்ஹன்—என்ற நிலைமையை பெற்றவர் தர்மகாயம் என்ற அங்கியை தரிக்க உரியர். அப்படி தரித்துவிட்டாராகில், அவர் உலக சம்பந்தம் முற்றும் விட்டவராவர். அவரால் உலகத்திற்கு யாதொருவிதமான பிரயோஜனமும் இல்லாமற்போய்விடும். அதனுல், மஹா கருணையால் அந்த தர்மகாயம் என்ற அங்கியை தரிக்காமல், நிர்மாணகாயராக வேனும், சம்போககாயராகவேனும் என்று இருப்பர். நிர்மாணகாயர்—என்ருல் உலகத்தின் க்ஷேமத்தின் பொருட்டு உயர்நலம் அமைந்த நிர்வாணத்தைத் துறந்து, வேண்டும் காலத்தில் உலகத்தில் ஸ்தூல சூக்ஷ்ம சரீரங்கள் எடுத்துக்கொண்டு தோன்றுவர்.

சம்போக காயர் என்ருல், சூக்ஷ்ம சரீரம் கொண்டு உலகத்தில் தோன்றிடார். ஆனுல் திவ்விய தேஜோமய சரீரத்துடன், ஏகதேசம் உலக க்ஷேமத்தைப்பற்றிய கவனமுள்ளவராய் அருள்பிரஸாதத்தை உலகத்திறகு செய்துவருவார்.

தர்மகாயர்—என்ற பதவியை அடைந்தால், பூர்ணபுத்தராவர். உண்மையில் காயம்—சரீரமன்று, நிலைமை. தர்மகாயம் என்பது பரமாத்மாவுடன் இரண்டறக்கலந்தநிலை. உலகத்தின் எவ்வித நினைப்பும் அற்றவிடம். கௌதம புத்தர் பரநிர்வாணம் பெற்றும், அதை வேண்டாம் எனத்தவிர்த்துப் பரமகருணையால், நிர்மாணகாயராகவே இருந்துள்ளார், என்பது குப்தசாஸ்திரத்தின் துணிபு.

308. இப்போது கூறியதை நீ கேட்டுவிட்டாய்.

309. ஏழாம்படியையும் நீ அடைவாய். பூர்ணப் பிரக்ஞை என்ற வாயிலையும் தாண்டுவாய். ஆனால் ததாகதராக ஆகவேண்டுமாயின், உன் பூர்வீகர்கள் நடந்த மார்க்கத்தை அனுசரிக்க வேண்டுமாயின், முடிவற்ற முடிவு கிட்டும்வரை, சுயநலம் பாராட்டக்கூடாது.

310. புத்தர் ஆகிவிட்டாய்—இனி நடக்கவேண்டிய நெறியைத் தெரிந்துகொள்.

*　　*　　*　　*　　*

311. கிழக்கை நோக்கிப்பார். சாந்தமான குளிர்ந்த ஜோதியின் வெள்ளம் கீழ்திசையில் பெருகுகின்றது பார். அக்காக்ஷி மண்ணுலகமும் விண்ணுலகமும் ஒன்றாகி ஸ்துதி செய்தாற்போலத் தோன்றுகிறது. வியக்தப் பட்டிருக்கின்ற நாலுவித மூர்த்த சக்திகளான, ஜ்வலிக்கின்ற அக்னி, ஓடுகின்ற ஜலங்கள், வாசனைவீசும் பூமி, சலிக்கின்ற வாயு, இவைகள் அன்பு ஆர்ந்த கானத்தை கோஷிக் கின்றன.

312. கவனமாய்க்கேள்! ... வெற்றிபெற்ற தீரன் ஸ்நானம் செய்யும் சுவர்ணமயமான ஜோதி கொண்ட அகாத சுழலினின்று தோன்றி, ஆயிரக்கணக்கான ராகங்களால், பிரபஞ்சத்தின் அந்தர்யாமியாக இருக்கின்ற "மாற்றம் கடந்த" வாக்கு அடியில் வருமாறு அறிவிக்கின்றது:—

**மரண தர்மத்துக்குள்ளான மனிதர்காள்!**

313. **உங்களுக்கு ஆனந்தம், பரமானந்தம் உண்டாகின்றது.**

314. அக்கரையினின்று ஒரு பிரயாணி திரும்பி இருக்கின்ருன், அறிமின்.

315. ஒரு நூதன அர்ஹன் பிறந்திருக்கிருன்!

316. எல்லா உயிர்களும் சாந்தி பெறுவாராக.

ஓம் தத் ஸத் ஓம்.

முற்றும்.

---

ஓம்

குருப்யோநம:

## பொற்சோபானம்.

1. மாசற்ற வாழ்க்கை,

2. திறந்த உள்ளம்,

3. சுத்தமான இதயம்,

4. ஆர்வமுள்ள சித்தம்,

5. மறைவுருத ஆத்யாத்மிக புத்தி,

6. உடனுைத்த சிஷ்யரிடத்துச் சகோதர பாவம்,

7. புத்திமதியையும் போதனையையும் ஏற்கவும் கொடுக்கவும் சித்தமாயிருத்தல்,

8. குருவிடத்துக் கடமை பூண்ட விசுவாச உணர்ச்சி,

9. அவர் மீது சிரத்தை பாராட்டி அவர் சத்தியநிதி என்று நம்பியபொழுது சத்தியத்தின் ஆணைக்கு மன மொப்பிக் கீழ்ப்படிதல்,

10. தமக்கு நிகழும் அநீதத்தை தைரியத்துடன் பொறுத்தல்,

11. தாம் கொள்ளும் தத்துவங்களைத் தீரமாய் வெளி யிடுதல்,

12. அநீதமாய்த் தாக்கப்பட்டவர்களை வீரத்தன்மை யுடன் பாலித்தல்,

**13.** குப்த வித்தையில் வர்ணித்துள்ள மனிதனது முன்னேற்றத்தையும் பரிபக்குவத்தையும் கைக்கொண்ட உயர்தர லக்ஷியத்தில் கண்ணுங் கருத்துமாயிருத்தல்,

இவைகள் ஒரு சிஷ்யன் பிரஹ்மஞான ஆலயத்துக்கு ஏறிச்செல்லும் பொற்சோபானத்தின் படிகளாம்.

சுபமஸ்து.



ஸ்ரீ ராமகிருஷ்ண பிரஸ், மதுரை;—54.

பிரும்ம ஞான சங்கத்தின் பிரசுரங்கள் அளவு கடந்து இருக்கின்றன இவை பெரிய பொது நூல் நிலையங்களில் காணப்படும்.

ஸநாதன தர்மத்தில் பூர்வீககால முதல் கொண்டாடப்படும் அத்யாத்மிக வாழ்வு, ஞானம், பக்தி, கருமம் முதலிய மார்க்கங்கள் யோகம், புருஷார்த்தங்கள், சுருதி, ஸ்மிருதி இதிஹாஸ புராணங்களின் உபதேசங்கள், தேவாராதனை, வருணாசிரம தர்மங்களுடைய அந்தரங்க தத்துவங்கள், இவைகளை அடிப்படையாகக்கொண்ட விஞ்ஞான பயிற்சிகள், நம்முடைய நாகரீகத்தில் ஸ்திரமாய் நிலைநிற்கும் தத்துவங்கள் முதலியவைகள், இவைகளை இக்கால தர்மத்திற்கும், நியமங்களுக்கும், தகுதியாக அறிந்து அவைகளை நன்ருய் ஆராய்ந்து அவைகளில் இக்காலத்திற்கு ஒவ்வாதவைகளை இக்காலத்திற்குரிய சாசுவத தத்துவங்களிலிருந்து பகுத்தறிந்து விலக்கியோ மாற்றியோ இக்காலத்திற்குரியவைகளை கடைப்பிடித்து ஒழுகுவதற்கு பிரும்ம ஞான இயக்கமும், அதின் மூலமாய் வெளிவந்திருக்கும் நூல்களும் மிக்க பயன் அளிக்கத் தக்கவைகள். ஸநாதன தர்மத்திலும் பொதுநல பிரவர்த்திகளிலும் உண்மையான பற்றுள்ளவர்கள் இச்சபையைச் சேர்ந்து மிக்க பிரயோஜனம் அடையக்கூடும்.

---

6A
7-18

## எமது புதிய வெளியீடுகள்.

### பாரத சமாஜ நித்திய பூஜை முறை.

ஷி பூஜை முறை, பட விளக்கங்களுடன், உயரிய கருத்துக்கள் கூடிய முன்னுரையும், தமிழில் கடவுள் வழிபாடும், தேவநாகரியிலும், தமிழ் பதவுரையுடனும் கூடிய பூஜை முறையும், இறுதியில், தேவநாகிரி தெரியாதவர்களுக்கு ஆங்கில அக்ஷரத்திலேயே உச்சரிப்புடனும் கூடிய சிறந்த பதிப்பு. விலை 12 அணா.

### மௌன வாக்கு.

பிளாவாட்ஸ்கி அம்மையார், ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்ட, சிறந்த பௌத்த சம்பிரதாய ஞான நூலுக்கு 1911ல் ஸ்ரீ ப. நாராயணய்யரின் தமிழ் மொழிபெயர்ப்பின் திருத்தமான இரண்டாம் பதிப்பு.

விலை 14 அணா.

### அடியிற்கண்ட புத்தகங்கள் விரைவில் வெளிவரும்.

1. காமலோகமாகிய புவர்லோகம்
2. சுவர்க்க மஹர் லோகங்கள்
3. சிஷ்மார்க்கம்

} சமீபத்தில் வெளிவரும்.

4. உலகின் அந்தரங்க ஆளுகையும், லௌகீக அரசியலும்.
5. யோக சாஸ்திரமும், சக்கர ஸ்தானங்களும்.

} தயாரிக்கப்பட்டு பின்னால் வெளிவரும்.

காரியதரிசி,
மதுரை பிரஹ்மஞான சபை,
97, மேலச் சந்தைப்பேட்டைத்தெரு,
மதுரை.